Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 58 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(09.09.2022) ஹிஜ்ரி 1444, ஸஃபர் - 12 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## எம்மை விமர்சிக்கும் அருகதை சாணக்கியனுக்குக் கிடையாது



நாமல் ராஜபக்ஷ காரசாரம்

எமது தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமை எமக்கு வாக்களித்த மக்களுக்கு மாத்திரம் இருக்கிறதே தவிர, சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் சாணக்கியன் போன்றவர்களுக்கு எந்தவோர் அருகதையும் கிடையாதென முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தான் சபையில் இல்லாத சமயத்தில்... 02 பக்கம்

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வலியுறுத்தி போராட்டம்

வடக்கு - கிழக்கில் நடத்த ஏற்பாடு

இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணியினரால் கையெழுத்துப் போராட்டம் நடைபெறவுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு குறிப்பிட்டு, வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் இந்த தொடர் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை 10ஆம் திகதி காலை, மாவிட்டபுரத்தில் போராட்டம் இடம்பெறும். இதன் பின்னர், பங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் நடைபெறும்.

அதன் பின்னர் ஊர்திப் பவனி மாவட்டங்களுக்கு சென்று, அந்தந்த மாவட்டங்களில் கையெழுத்துப் போராட்டம் நடைபெறும். 02 பக்கம்

# 37 இராஜாங்க அமைச்சர்கள் நேற்று பதவிப்பிரமாணம்



- கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் புறக்கணிப்பு
- பொதுஜன பெரமுனவினருக்கு முன்னுரிமை

•யோ.தர்மராஜ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் 37 புதிய இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில், இவர்கள் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான அழைப்புகள் விடுக்கப்பட்டும் இதுவரை எந்தவொரு எதிர்க்கட்சியும் முன்வராதமையினால் ஆளுந்தரப்பை சேர்ந்த மற்றும்... 02 பக்கம்

# சமந்தா பவர் கொழும்புக்கு!



## எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் ரணிலுடன் பேசுவாரென தகவல்

அமெரிக்காவின் சக்திவாய்ந்த தன்னார்வ அமைப்பான யூ.எஸ்.எய்ட் அமைப்பின் தலைமை நிர்வாகி சமந்தா பவர் நாளை சனிக்கிழமை கொழும்புக்கு வரவுள்ளார்.

தனது விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் முக்கிய கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளார். அதேபோல் வேறு பல முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளார். 02 பக்கம்

## கோட்டாபயவுக்கு சிறப்புரிமையா?

கூடாதென்கிறார் மரிக்கார் எம்.பி.



•யோ.தர்மராஜ்

நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி, வங்குரோத் தடைய காரணமான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிறையில் இருக்க வேண்டியவர். ஆனால், அவருக்கு எந்த அடிப்படையில் பொது மக்களின் வரிப்பணத்தில் சிறப்புரிமைகள் வழங்கப்படுகின்றதென எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் சபையில் கேள்வி எழுப்பினார். 02 பக்கம்

## சபையில் உரையாற்ற சந்தர்ப்பம் தேவை

டலஸ் எம்.பி. கோரிக்கை

•யோ.தர்மராஜ்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து எதிர்க்கட்சியில் அமர்ந்து சுயாதீனமாக செயற்படும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட 13 பேருக்கும் நாடாளுமன்றத்தில் தங்களுடைய கருத்துகளை தெரிவிப்பதற்கான நேரத்தை வழங்குமாறு டலஸ் அழகப்பெரும சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

ஆளுந்தரப்பிலிருந்து பிரிந்து எதிர்க்கட்சியில் அமர்ந்தவர்களுக்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் இணைந்து உரிய நேரத்தை வழங்கவேண்டுமென ஆளுந்தரப்பு பிரதான கொறடா, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பதிலளித்தார். 02 பக்கம்

## உலகெங்கிலும் நேற்று ஓணம் பண்டிகை கொண்டாட்டம்



திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது

உலகெங்கிலும் உள்ள மலையாள மக்கள் ஓணம் பண்டிகையை நேற்று கொண்டாடினார்கள். அனைத்து வீடுகளிலும் அத்தப்பூ கோலம் போட்டு பெண்களும், சிறுவர்களும் மகிழ்ந்தனர். முன்னைய காலத்தில் கேரளாவை மகாபலி மன்னர்... 02 பக்கம்

## சஜித் - நாமல் வாக்குவாதம்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று நாடாளுமன்றத்தில் கடும் வார்த்தைப் பரிமாற்றம் இடம்பெற்றது.

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற போராட்டத்தின்போது ஜனாதிபதி செயலகத்திற்குள் பலவந்தமாக பிரவேசித்ததாக குற்றஞ்சுமத்தி நடிகை தமிதா அபேரத்ன... 02 பக்கம்



## அனுகூலங்கள் சபைக்கு உறுப்பினர்கள் நியமனம்



நாடாளுமன்ற பேரவையில் அனுமதி

நலன்புரி அனுகூலங்கள் சபைக்கு உறுப்பினர்களை நியமிக்க நிதி அமைச்சரினால் நாடாளுமன்ற பேரவைக்கு முன்வைக்கப்பட்டிருந்த முன்மொழிவுளுக்குப் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய கே.எச்.ஜெசி முலர் மற்றும் கே. துனுசிங்க ஆகியோரை நியமிப்பதற்கு... 02 பக்கம்

## ஐ.எம்.எவ். உடன் இதுவரை இணக்கப்பாடு மட்டுமே!



அமைச்சர் சுசில்

•யோ.தர்மராஜ்

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இலங்கை அரச அதிகாரிகளுக்கும் இடையில் எவ்வித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை. மாறாக, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் அதிகார மட்ட இணக்கப்பாடு மாத்திரமே ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளதாக சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த சபையில் அறிவித்தார்.

அத்தோடு, சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையில் அனுமதிபெற்ற பின்னரே, குறித்த உடன்படிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க முடியும். 02 பக்கம்

## இந்திய அமைதிப்படையால்தான் இலங்கையில் சீனா நுழைந்தது!

ஓய்வுபெற்ற இந்திய லெப்டினன்ட் ஜெனரல் சங்கர்



“ஜப்பான் இலங்கையில் ஆழமான வேர்களைக் கொண்டுள்ளது மற்றும் மக்கள் சார்பு திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு இந்தியாவும்... 03 பக்கம்

## ராஜபக்ஷக்களின் கூட்டாளி சாணக்கியன் பேசலாமா?

சந்திரகாந்தன் எம்.பி. கேள்வி



•யோ.தர்மராஜ்

எங்களோடு அரசியல் செய்து, குறிப்பாக ராஜபக்ஷக்களோடு நெருங்கிப் பழகிவிட்டு, தேர்தலில் வெல்வதற்காக தமிழரசுக் கட்சியோடு சரணாகதியடைந்த சாணக்கியனுக்கு எங்களை பற்றிப் பேசுவதற்கு எந்த அருகதையுமில்லை என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சபையில் சாணக்கியன் எம்.பிக்கு பதிலடி கொடுத்தார். 03 பக்கம்

## சனத் நிஷாந்தவிற்கு எதிரான மனுக்களை விசாரிக்க தீர்மானம்

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டை அடிப்படையாகக் கொண்டு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 2 மனுக்களையும் எதிர்வரும் 13ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது. அன்றைய தினம், இது தொடர்பான விடயங்களை முன்வைக் குமாறு சனத் நிஷாந்த உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் பிறப்பிக்கப் பட்டுள்ளது. அதேபோல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவும் அன்றைய தினம் ஆஜராகவேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இராஜகுலேந்திரா காலமானார்



03 பக்கம்

## தீபாவளி காலத்திலாவது விலைக்குறைப்பு செய்க!




இராதா எம்.பி. கோரிக்கை

•யோ.தர்மராஜ்

அடுத்த மாதம் 24ஆம் திகதி தீபாவளி கொண்டாடப்படுவதால், அரிசி, பருப்பு மற்றும் பயறு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களைக் குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென... 02 பக்கம்

## உஷ்



இராஜாங்க அமைச்சராக நேற்று பதவியேற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பிக்கள் பதவியேற்பு முடிந்த கையோடு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்க அவரது வீட்டுக்குச் சென்றனர்.

அங்கு அவரது ஆசியினைப் பெற்ற எம்.பிக்கள்,தொடர்ந்தும் கட்சியுடன் இருப்பதாகவும் கட்சியின் முன்னேற்றத்திற்கு பாடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி கோட்டாவைச் சந்திக்க எவரும் செல்லவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## நிவாரணம் வழங்குவதில் அரச பொறிமுறை அரசியல், இனவாத நோக்கில் செயற்படுகிறது

சர்வதேச சமூகத்துக்கு மனோ தெரிவிப்பு



பின்தங்கிய நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச பொறிமுறை மீது எனக்கு நம்பிக்கை இல்லை. நிவாரணம் பெறுவோரை தெரிவுசெய்வதில் பிரதேச செயலக, கிராம சேவகர் மட்ட அரசாங்க அதிகாரிகள் அரசியல் நோக்கிலும், இனவாத நோக்கிலும் செயற்படுகின்றனர். உண்மையான நிர்க்கதியான மக்களுக்கு, இந்திய அரசு, தமிழக அரசு, உலக நாடுகள், ஐ.நா. அமைப்புகள் நன்கொடையாக வழங்கும் நிவாரணங்கள் முறையாகக் கிடைப்பதில்லை. எனவே, நிவாரண நன்கொடைகள் நேரடியாக நிர்க்கதியான மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்த அவற்றை சிவில் அமைப்புகள் மூலமாக சர்வதேச சமூகம் வழங்கவேண்டும். அவை கண்காணிக்கப்பட வேண்டும். நிவாரணம் பெறுகின்றவர்கள்... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

சமந்தா பவர் இலங்கைக்கு ஏதும் வேலைகள் செய்வாவோ இல்லையோ விமல் வீரவங்ச ரீம் இனி தங்கட வேலைய காட்ட வழியை திறந்துவிட்டுட்டா என்னங்கோ..



## எம்மை விமர்சிக்கும்...

தன்னைப்பற்றி அவதூறாகப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் குற்றச்சாட்டு தொடர்பில் கருத்துக் கூறுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேற்படி தெரிவித்தார்.

"2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபோது, கொழும்பு இரவு விடுதிகளில் சாணக்கியன் கும்மாளமடித்துக் கொண்டிருந்த காலங்களிலேயே நாங்கள் தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திகளையும் தமிழ் மக்களின் உடனடித் தேவைகளையும் நிறைவேற்றும் பணிகளையும் செய்யத் தொடங்கிவிட்டோம்.

அப்பொழுதெல்லாம் இரவு விடுதிகளுக்குள் முடங்கிக்கிடந்த தம்பி சாணக்கியன், இப்போது தன் சுயநல அரசியலுக்காக எம்மை விமர்சிக்கத் தொடங்கியிருக்கிறார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள், மருத்துவமனைகள், வீட்டுத்திட்டங்கள், வேலைவாய்ப்புகள், விளையாட்டுக்கழகங்கள் என பல உதவிகளைச் செய்திருக்கிறோம். இவற்றில் பலவற்றை அப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் நேரில் பார்த்தே இருக்கமாட்டார். அப்படிப்பட்ட சுயநல அரசியல்வாதிக்கு எம்மைப்போன்ற மக்கள் சேவகர்களை விமர்சிக்கும் எந்தவோர் அருகதையும் கிடையவே கிடையாது.

பிள்ளையான் என்பவர் அன்றுதொடக்கம் இன்றுவரை தான்கொண்ட கொள்கையில் மாற்றமின்றி, கட்சித்தாவலின்றி எம்மோடு தொடர்ந்து பயணித்து வருகிறார். அவரது கட்சி நிகழ்வில் நாம் கலந்துகொள்வது தார்மீகக் கடமையும்கூட. நிலைமை அப்படியிருக்கையில், அலரி மாளிகைக்கு அடிக்கடி வந்து எம்மோடு தேநீர் அருந்துவதும், நிலையான அரசியல் கொள்கையின்றி கட்சித்தாவி சுயநலத்துக்காக தமிழ் மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதையும் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது.

நாங்கள் இப்பொழுதும் எமக்கு வாக்களித்த மக்களைப் பயமின்றிச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால், புலம்பெயர் தமிழர்களால் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டதையும், இலண்டன் கூட்டத்தை இரத்துசெய்யும் நிலையேற்பட்டதையும் சாணக்கியன் மறந்துவிடக்கூடாது" எனவும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## ஓணம் பண்டிகை கொண்டாட்டம்...

ஆட்சிசெய்தபோது மக்கள் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தனர். இந்த நிலையில் 3 அடி நிலம் கேட்ட திருமாலுக்கு தனது தலையை 3ஆவது அடியாக வழங்கிய மகாபலி, பாதாள உலகம் சென்றார். அப்போது அவர்தான் ஆண்டுக்கு ஒருமுறை வந்து மக்கள் மகிழ்ச்சியாக உள்ளார்களா என்பதை பார்க்க வேண்டுமென இறைவன் திருமாலிடம் வேண்டினார். இதற்கு திருமாலும் அனுமதித்தார்.

அதன்படி ஆண்டுக்கு ஒருமுறை மகாபலி மன்னர் நகர்வலம் வரும் நாள் தான் ஓணம் பண்டிகையாக கேரள மக்களால் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் மன்னருக்கு தங்கள் மகிழ்ச்சியை தெரிவிக்கும் வகையில் மலையாள மொழிபேசும் மக்கள், வீடுகளில் அத்தப்பூ கோலம் போட்டு, அறுசுவை விருந்து படைத்து வருகிறார்கள். கொல்லம் ஆண்டான மலையாள ஆண்டின் முதல் மாதமான சிங்கம் மாதத்தில் ஓணம் பண்டிகை ஆண்டுதோறும் 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா தொற்று காரணமாக ஓணம் பண்டிகை பெயரளவிற்கே கொண்டாடப்பட்டது.

இந்த நிலையில், இந்த ஆண்டு ஓணம் பண்டிகையை விமரிசையாக கொண்டாட திட்டமிடப்பட்டது. அதன்படி கடந்த 30ஆம் திகதி ஓணம் பண்டிகை தொடங்கியதையடுத்து கேரள மாநிலம் விழாக்கோலம் பூண்டது. திருவோண திருநாளான நேற்று வியாழக்கிழமை கேரளா முழுவதும் திரு ஓணம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

## 37 இராஜாங்க அமைச்சர்கள்...

அரசுக்கு ஆதரவளித்த 37 உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த 29 பேரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த 6 பேரும் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த இருவரும் உள்ளடங்குகின்றன.

அதன்படி, நேற்று காலை ஜனாதிபதி முன்னிலையில் இராஜாங்க அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டவர்களின் முழு விபரமும் வருமாறு, ஜகத் புஷ்பகுமார - வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர், ரஞ்சித் சியம்பலாபிட்டிய - நிதி இராஜாங்க அமைச்சர், லசந்த அழகியவன்ன - போக்குவரத்து இராஜாங்க அமைச்சர், திலும் அமுனுகம - முதலீடு மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர், கனக ஹேரத் - தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர், ஜானக வக்கும்புர - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர், செஹான் சேமசிங்க -நிதி இராஜாங்க அமைச்சர், மொஹான் பிரியதர்ஷன் டி சில்வா - விவசாய இராஜாங்க அமைச்சர், தேனுக விதானகே - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர், பிரமித பண்டார தென்னகோன் - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், ரோஹன திஸாநாயக்க - விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர், அருந்திக பெர்னாண்டோ -நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர், விஜித பேருகொட - பிரிவெனா கல்வி இராஜாங்க அமைச்சர், லொஹான் ரத்வத்த - பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர், தாரக பாலசூரிய - வெளிவிவகார இராஜாங்க அமைச்சர், இந்திக்க அனுருத்த - மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர், சனத் நிஷாந்த - நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர், சிறிபால கம்லத் - நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர், சாந்த பண்டார - ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர், அனுராத ஜயரத்ன - நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர், சதாசிவம் வியாழேந்திரன் - வர்த்தக இராஜாங்க அமைச்சர், சிசிர ஜெயக்கொடி - சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர், பியால் நிஷாந்த டி சில்வா - கடற்றொழில் இராஜாங்க அமைச்சர், பிரசன்ன ரணவீர - சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், டி.வி.சானக்க - வனவிலங்கு மற்றும் வன வளங்கள் இராஜாங்க அமைச்சர், டி.பி.ஹேரத் - வள அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர், ஷசீந்திர ராஜபக்ஷ - நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர், சீதா அரம்பேபொல - சுகாதார இராஜாங்க அமைச்சர், காதர் மஸ்தான் - கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர், அசோக பிரியந்த - உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர், அரவிந்தகுமார் - கல்வி இராஜாங்க அமைச்சர், கீதா குமாரசிங்க - பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார இராஜாங்க அமைச்சர், சிவநேசதுரை சந்திரகாந்தன் - கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், சுரேஷ் ராகவன் - உயர் கல்வி இராஜாங்க அமைச்சர், டயானா கமகே - சுற்றுலா இராஜாங்க அமைச்சர், சாமர தசநாயக்க - ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர், அனுப பாஸ்குவல் - சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்.

## தீபாவளி காலத்திலாவது...

நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ் ணன் சபையில் கோரிக்கை விடுத்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பமான சபை அமர்வில் சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாட்டுக்குத் தேவையான கோதுமை மா இறக்குமதி செய்யப்பட்டவில்லை. பெருந்தோட்டத்துறையிலுள்ளவர்களின் பிரதான உணவு மூலப்பொருளாக கோதுமை மா காணப்படுகின்றது. ஆனால், இன்று 400 ரூபாவிற்கும் அதிக விலையில் கோதுமை மா விற்பனை செய்யப்படுகின்றது. விலை அதிகரிப்பு காரணமாக ஒருவேளை உணவைக் கூட உண்ண முடியாத நிலைமை காணப்படுகின்றது.

பெருந்தோட்டத்துறையில் விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு எரிபொருள் இன்மையால் விவசாயத்தை முன்னெடுக்க முடியாதுள்ளனர். எரிபொருள் இன்மையால் முச்சக்கரவண்டி ஓட்டுநர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று, சிறு தொழிலில் ஈடுபடுபவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், உலக உணவு ஸ்தாபனம் வழங்கும் நிதியை மக்களுக்கு நேரடியாக வழங்குவோமென அரசு அறிவித்துள்ளதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், இது மக்களுக்கு சென்றடைய வேண்டும். பெருந்தோட்டத்துறை மக்களுக்கு பொருட்கள் வழங்கப்படுமாயின் அதனை ச.தோ.ச ஊடாக இல்லாது வேறு வழியில் வழங்கவேண்டும்.

அடுத்த மாதம் 24ஆம் திகதி தீபாவளி கொண்டாடப்படுவதால், அரிசி, பருப்பு மற்றும் பயறு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## சமந்தா பவர்...

கடந்த ஆட்சியின்போது, இலங்கையுடனான 480 மில்லியன் டொலருக்கான அமெரிக்காவின் மில்லேனியம் சேலஞ்ச் கோர்ப்பரேஷன் (எம்.சி.சி) ஒப்பந்தம் அற்றுப்போனது.

அதன்படி இந்த ஒப்பந்தத்தின் கீழ் பயன்பெறும் நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டது.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக எம்.சி.சிக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. எவ்வாறாயினும், தேர்தலுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை நிறுத்த முடிவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த பின்னணியில் மேற்படி ஒப்பந்தத்தை மீண்டும் களத்திற்கு கொண்டுவருவது தொடர்பில் சமந்தா பவர் கொழும்பில் பேச்சுக்களை நடத்தவுள்ளாரென செய்திகள் கசிந்துள்ளன.

## அனுகூலங்கள் சபைக்கு ...

இவ்வாறு அனுமதி கிடைத்திருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

அதேநேரம், தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் காணப்படும் வெற்றிடத்துக்கு ஏ.எம்.நஹியாவை நியமிப்பது தொடர்பான பரிந்துரையை ஜனாதிபதிக்கு மேற்கொள்வதற்கும் நாடாளுமன்றப் பேரவை தீர்மானித்திருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். நாடாளுமன்றப் பேரவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் கூடியபோதே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இக்கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை...

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்க வலியுறுத்தி, சில மாதங்களின் முன்னர் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. அதன் தொடர்ச்சியாகவே, இந்த போராட்டமும் நடக்கிறது.

## சபையில் உரையாற்ற...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பமான சபை அமர்வில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் விசேட கூற்றை முன்வைத்து கருத்து வெளியிடும்போதே டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரும் இந்த கோரிக்கையை முன்வைத்ததுடன், அதற்கு ஆளுந்தரப்பு பிரதான கொறடா மற்றும் சபை முதல்வர் ஆகியோரும் பதிலளித்தனர்.

இங்கு ஆரம்பம் உரையை ஆற்றிய டலஸ் அழகப்பெரும,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் குழுக்கள் நான்கு உள்ளன. இதில் மூன்று உறுப்பினர்கள் குழுவுக்கு எவ்வித சிக்கலுமின்றி நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான நேரத்தை ஆளுந்தரப்பு ஒதுக்குகின்றன. ஆனால், நாங்கள் எதிர்க் கட்சியில் அமர்ந்த நாள் முதல் அந்த மூன்று குழுக்களுக்கும் ஒதுக்கப்படும் நேரம் எங்களுக்கு ஒதுக்கப்படுவதில்லை.

எங்களிடையே வெவ்வேறு நிலைப்பாடுகள் இருக்கலாம். கருத்து தெரிவிப்பதற்கு, நிலைப்பாட்டை முன்வைப்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையை யாராலும் பறிக்கமுடியாது. சபாநாயகர், ஜனாதிபதி மற்றும் பிரதமரும் இது தவறு என்றால், இந்த உயரிய சபையில் வேறொரு சக்தி இதனைக் கட்டுப்படுத்துகின்றதாக இருக்கும். எனவே, தயவுசெய்து இந்த உறுப்பினர்களின் மனசாட்சி, பாதுகாப்பு மற்றும் பொறுப்பையும் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

### அநுரகுமார திஸாநாயக்க எம்.பி.

நாடாளுமன்றத்தில் 60 வீத நேரத்தை எதிர்க்கட்சிக்கும் 40 வீத நேரத்தை ஆளுந்தரப்புக்கும் வழங்கும் சம்பிரதாயமே காணப்பட்டது. ஆனால், இறுதியாக இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் இந்த சம்பிரதாயம் மாற்றப்பட்டு, ஆளுந்தரப்புக்கு 60 வீத நேரத்தையும் எதிர்க்கட்சிக்கு 40 வீத நேரத்தை வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறிப்பாக, நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆளுந்தரப்புக்கு இருப்பதால் 60 வீத நேரத்தை ஆளுந்தரப்புக்கு வழங்க வேண்டுமென விவாதிக்கப்பட்டது. ஆனால், தற்போது குறிப்பிட்டளவான உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளனர். இதில் டலஸ் அழகப்பெரும தரப்புக்கு தங்களுடைய கருத்தையும் நிலைப்பாட்டையும் தெரிவிப்பதற்கு உரிய நேரத்தை வழங்க வேண்டும் - என்றார்.

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

ஆளுந்தரப்பிலிருந்து பிரிந்துவந்த டலஸ் அழகப்பெரும தலைமையிலான 13 பேருக்கும் தங்களுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு உரிய நேரத்தை வழங்க வேண்டும் - என்றார்.

இதற்கு பதிலளித்த ஆளுந்தரப்பு பிரதான கொறடா, அமைச்சர் பிரசன்ன ரணத்துங்க,

டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழு எதிர்க்கட்சியில் அமர்வதாக அறிவித்த தினத்திலும் நாங்கள் அவர்களுக்கான நேரத்தை வழங்கினோம். ஆனால், அவர்களுக்கு வழங்கிய நேரத்தில் 30 வீதமே அரசாங்கத்துக்காக பேசியுள்ளனர். ஏனைய 70 வீதம் அரசாங்கத்துக்கு எதிராகவே கருத்து தெரிவித்துள்ளனர்.

இவர்கள் எதிர்க்கட்சியில் அமர்வதாக அறிவித்து எதிர் தரப்புக்குச் சென்று அமர்ந்துள்ளார்களாயின் அவர்களுக்கான நேரத்தை எதிர்க்கட்சியும் வழங்க வேண்டும். ஆளுந்தரப்பு என்ற வகையில் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அவர்களின் நிலைப்பாட்டை முன்வைப்பதற்கு எதிர்க்கட்சிக்கு குறிப்பிட்ட அளவான நேரத்தை வழங்குவதற்கும் நாங்கள் தயாராகவுள்ளோம் - என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி பிரதான கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல,

அவர்கள் அனைவரும் ஆளுந்தரப்பிலேயே நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டனர். எனவே, ஆளுந்தரப்பே அவர்களுக்கான நேரத்தை வழங்க வேண்டும் - என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

நீங்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்தாலும் உங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை போன்றே தெரிகின்றது. மக்கள் ஏற்றுக்கொள்வதைத் தவிர, அரசாங்கமே எதிர்க்கட்சியோ எங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி உரிய முடிவை எடுப்போமென சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

## நிவாரணம் வழங்குவதில்....

யார் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி முன்வைத்த இடைக்கால பாதீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் நடைமுறை சாத்தியம் அற்றவை. கணிசமான யோசனைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் இல்லை. துண்டு விழும் தொகையை ஒருபோதும் நிதியமைச்சர் ஜனாதிபதியால் சரி செய்ய முடியாது. ஏற்கனவே அரச கஜானா காலி. ஆகவே எங்கே இருந்து நிதி வரப்போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

இதனால்தான் நான் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றியபோது, எனது அக்கறை, அவதானம் ஆகியன, பின்தங்கிய நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் மாத்திரம் இருக்கிறதென கூறினேன். அதிலும், பின்தங்கிய மக்கள் யார் என்பதை அறிவதில் அதிக கண்காணிப்பு வேண்டுமென கூறினேன்.

ஏற்கனவே, சமுர்த்தி மற்றும் பின்தங்கியோர் பட்டியலில் இருக்கின்ற பெயர்கள் தொடர்பில் எனக்கு திருப்தி இல்லை. அங்கே நிவாரணம் பெற தகைமையற்ற வசதியானோர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அதேபோல் அங்கே நிவாரணம் பெறவேண்டிய நிர்க்கதியான மக்களின் பெயர்கள் இடம்பெறவில்லை. இதை நான் பொறுப்புடன் கூறுகிறேன்.

இதற்கு காரணம் அரசியல்வாதிகள் தங்கள் ஆதரவாளர் பெயர்களை அங்கே திணித்துள்ளார்கள். எனது தொகுதி கொழும்பில் வாழும் 'ஹர்பன் புவர்' என்ற நகர பாமரர்களின் பெயர்கள் முறையாக அங்கே இல்லை. குறிப்பாக சொந்த வீட்டில் வாழவில்லை என்ற காரணத்தால் பலரது பெயர்கள் இடம்பெறவில்லை. இது எப்படி? சொந்த வீடு இல்லாத வாடகை வீட்டில் வசிக்கும் ஏழைகள் மண்ணை சாப்பிட்டு, தண்ணீர் குடிக்க வேண்டுமா? அடையாள அட்டையை பார்த்து கஷ்டப்படும் எல்லோருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

அரசியல் காரணமாகவும், தமிழர்கள் என்ற காரணத்தாலும், பாரபட்சமாக நமது மக்கள் நடத்தபடுவதை நான் இலங்கைக்கு உதவும் உலக சமூகத்துக்கு சொல்லி வருகிறேன். இன்னமும் சொல்வேன்.

அடுத்தது, பெருந்தோட்டங்களில் வாழும் பாமர மக்கள். உழைக்கும் மக்கள். இன்று கோதுமை, பாண், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையேற்றத்தால் விழிபிதுங்கி போயிருக்கும் பிரிவினர், நாட்சம்பள தொகையை 25ஆல் பெருக்கி மாதம் இவ்வளவு சம்பளம் எனக்கூறி அவர்களை சமுர்த்தி மற்றும் பின்தங்கியோர் பட்டியலில், பிரதேச செயலக, கிராம சேவகர் மட்ட அரசாங்க அதிகாரிகள் சேர்ப்பதில்லை. இந்த மாத சம்பளம், காகிதத்தில் மட்டுமே இருக்கிறது. தேவையான அளவு நாட்கள் வேலை எல்லோருக்கும் கிடைப்பதில்லை. மாத சம்பளமும் கிடைப்பதில்லை.

இங்கேயும் தமிழர் என்ற இனவாத நோக்கில், பாரபட்சமாக நமது மக்கள் நடத்தப்படுகிறார்கள் என நான் நினைக்கிறேன். தமிழகத்தில் இருந்து வந்த பொருட்களை இலங்கையில் துன்பத்தில் வாழும் எல்லா மக்களுக்கும் கொடுங்கள் என நான்தான் முதன் முதலில் சொன்னேன். நாடாளுமன்றத்திலும் சொன்னேன். அதையிட்டு தமிழக முதல்வரும் மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்.

ஆனால், அரசாங்கம் கடைசி கட்டத்தில் தமிழகத்தில் இருந்துவந்த பெருந்தொகை பொருட்களை உணவு ஆணையாளரிடம் கொடுத்து விநியோகம் செய்தது. இதில் நமது மக்களின் பிரதிநிதிகள் தொடர்புபடவில்லை. ஆகவே இந்த பொருட்களை அரசு அதிகாரிகள் தனது சொந்த விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் விநியோகம் செய்தார்கள்.

இவற்றை நான் அறிந்து வைத்துள்ளேன். நம் நாட்டின் பின்தங்கிய மக்களுக்கென வெளிநாடுகளிலிருந்து தரும் நன்கொடைகள் எல்லோருக்கும் பாரபட்சமின்றி கிடைக்க வேண்டும் என்பது எனது குரல். அது யாருக்கு கேட்க வேண்டுமோ அவர்களுக்கு கேட்கும்படி நான் செய்வேன் - என்றார்.

## கோட்டாபயவுக்கு...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பமான சபை அமர்வில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் :

நாட்டில் இன்று (நேற்று) வரலாற்று சிறப்புமிக்க நாளாகும். போராட்டங்களினாலேயே இன்று மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர். ஆனால், போராட்டத்தின்மீது தாக்குதல் நடத்தி சனத் நிஷாந்த இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். கழிவு உரத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய சஷீந்திர ராஜபக்ஷவும் இராஜாங்க அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார்.

அதேபோன்று, நாடாளுமன்றத்தில் மிளகாய் தூள் வீச்சுத் தாக்குதல் நடத்திய, கஞ்சாவை பிரபல்யப்படுத்த வேண்டுமெனக் கூறிய, தேரரை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டவரும் இன்று இராஜாங்க அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர். எனவே, இன்று அற்புதமான நாளாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் 14 உறுப்பினர்களே இருக்கின்றனர். இதில் 6 பேர் இராஜாங்க அமைச்சராகவும் இருவர் அமைச்சர்களாகவும் பதவி ஏற்றுள்ள நிலையில், மற்றொருவரும் அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளனர். அதன்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 14 பேரைக் கொண்ட சு.க. இன்று 5 பேரைக்கொண்ட கட்சியாக தள்ளியுள்ளார். இராஜாங்க அமைச்சர்கள் சம்பளம் பெற்றுக்கொள்ளப்போவதில்லையென்று கூறினாலும் மூன்று வாகனங்கள், உத்தியோக பூர்வ வீடு, அதிகாரிகள் குழு என அனைத்தையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். சம்பளத்தை விட அதிக கொடுப்பனவையே பெற்றுக்கொள்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்காலிக ஜனாதிபதியே என்பதை மொட்டுக்கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும். அவர் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியல்ல. இருவருடங்களே அதிகாரத்தில் இருப்பார். அவருடைய தவறான கட்டளையை நடைமுறைப்படுத்துவோர் எதிர்காலத்தில் நட்டஈட்டை வழங்க வேண்டியிருக்கும்.

நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி வங்குரோத்தடையக் காரணமாக இருந்தவர்களே இராஜாங்க அமைச்சர்களாகவும் பதவி ஏற்றுக்கொண்டுள்ளனர். நாட்டை சீரழித்து நாட்டைவிட்டுச் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்கு திரும்பிவரும் போது ஒரு குழுவே அவரை வரவேற்பதற்கு சென்றது.

அவர் சிறையில் இருக்கவேண்டும். அவர் ஒவ்வொரு நாட்டுக்குச் சென்று ஒழிந்திருக்காது நாட்டுக்கு வந்ததும் நல்லதே. இந்த நாடு முகங்கொடுத்துள்ள பாதிப்புக்கு அவர் பொறுப்புக் கூறவேண்டும். நாட்டைவிட்டு ஓடிய அவருக்கு, எந்த அடிப்படையில் பொதுமக்களின் வரிப்பணத்தில் வீடுகள், சிறப்புரிமைகள், வாகனம் மற்றும் பாதுகாப்பு வழங்கப்படுகின்றன.

நாட்டை சீரழித்தவருக்கு வரிப்பணத்தில் சிறப்புரிமைகளையும் நாட்டுக்காக போராடியவர்களை கைதுசெய்யும் இந்த அரசாங்கம் எதற்கு? – எனவும் கேள்வியெழுப்பினார்.

## ஐ.எம்.எவ். உடன் இதுவரை...

அதற்கு சில காலம் எடுக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பமான சபை அமர்வில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இலங்கை அரச அதிகாரிகளுக்கும் இடையில் எவ்வித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட வில்லை. மாறாக, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் அதிகார மட்ட இணக்கப்பாடு மாத்திரமே ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளமையை அனைவரும் அறிந்ததே. இவ்வருடத்தில் பொருளாதார வளர்ச்சி - 8ஆக வீழ்ச்சியடையுமென எதிர்வுக் கூறப்பட்டுள்ளது. பணவீக்கம் 60 வீதத்தை எட்டியுள்ளது. வரவு – செலவுத்திட்ட பற்றாக்குறை 10 வீதமாக காணப்படுகின்றன. இந்த நிலையிலேயே இருக்கமுடியாது. இதிலிருந்து நாங்கள் மீளவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு அமையவே இந்த நெருக்கடிகளிலிருந்து மீளமுடியும் என்ற எதிர்பார்ப்பிலேயே இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டது. இதுவரை முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கு அமைய 4 வருடங்களுக்கு விரிவாக்கப்பட்ட கடனுக்கான இணக்கப்பாடு மாத்திரம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியை – 4 இலிருந்து ப்ளஸ் 2 ஆக உயர்த்த வேண்டியுள்ளது. அரச வருமானத்தை 2065ஆம் வருடத்திற்குள் 15 வீதமாக அதிகரிக்க வேண்டும். அரச வியாபாரங்கள் நட்டமடைவதால் அவற்றை மறுசீரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது.

மேலும், நிதித் தேவையை பலப்படுத்த வேண்டும். அதற்காக நாடாளுமன்றத்தில் மூன்று குழுக்களை உருவாக்க வேண்டியுள்ளது. ஊழல் மோசடியை குறைப்பதற்கு சட்ட மசோதாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு அமையவே, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுடன் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுடன் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதும் அதனை அமைச்சரவையிலோ அல்லது நாடாளுமன்றத்திலோ முன்வைக்க வில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையில் அனுமதி பெற்ற பின்னரே அவை முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாள் சபையில் அனுமதிபெற்ற பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் முன்வைக்க முடியும். அதற்கு சில காலம் எடுக்கும் - என்றார்.

## சஜித் – நாமல் வாக்குவாதம்...

அண்மையில் கைதுசெய்யப்பட்டமை மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறை குறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியதையடுத்து, இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் வார்த்தை மோதல் ஏற்பட்டது.

அப்பாவி ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது நடத்தப்படும் அடக்குமுறையை நிறுத்துமாறும், நடிகை தமிதா அபேரத்னவை தடுத்துவைப்பதைத் தவிர்க்குமாறும் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கோரினார்.

நாட்டில் இவ்வாறான அடக்குமுறைகள் தொடரும் போது அனைத்து அரசியல் கட்சிகளும் எவ்வாறு முன் வந்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமென அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.


எதிர்க்கட்சித் தலைவர் இதனை சுட்டிக்காட்டியதும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நாட்டின் தற்போதைய சட்டங்களின்படி குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளுக்கு இணங்கி ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் மேலும் கூறினார்.

"எதிர்க்கட்சித் தலைவரே, காழ்ப்புணர்ச்சிச் செயல்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து உங்களுக்கு எந்தக் கவலையும் இருக்க முடியாது. நாம் அனைவரும் நீதித்துறையின் சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோம். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நாங்கள் இருவருமே சம்பியனாக இருக்கக் கூடாது" என்று நாமல் ராஜபக்ஷ கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ராஜபக்ஷவுக்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், பொதுமக்களின் பிரதிநிதித்துவத்தை ராஜபக்ஷ குடும்பத்தாலோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவோ தீர்மானிக்க முடியாது என சுட்டிக்காட்டினார். இலங்கையின் அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி பற்றிய ஏற்பாடுகள் உள்ளதாகவும் அவை தற்போது எழுதப்பட்ட கருத்தாக்கங்களாக மட்டுமே கருதப்பட முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# சீனா 5,000 மெட்ரிக் தொன் அரிசி நன்கொடை






சீன மக்களின் நட்புறவின் இன்னுமொரு அடையாளமாக சீன அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும், இலங்கை மக்களுக்கு பரிசாக வழங்கப்பட்ட அரிசித் தொகையை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்துக்கமைய 5,000 மெட்ரிக் தொன் அரிசி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரிசி தொகையை உத்தியோகபூர்வமாக பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சில் இடம்பெற்றது. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் சீனத் தூதுவர் கீ சென்ஹொன் உள்ளிட்ட இருதரப்பு அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

10 இலட்சம் வரையிலான மாணவர்களுக்கு இந்த உணவு வேலைத்திட்டத்தின்கீழ் அரிசி நிவாரணத்தைப் பெற்றுக்கொடுத்து, தெரிவு செய்யப்பட்ட 7 ஆயிரத்து 925 பாடசாலைகளில் இடம்பெறும் இந்த வேலைத்திட்டத்தினூடாக இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த எண்ணிக்கையில் 78 சதவீதமான பாடசாலைகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின்போது, மேலும் 5,000 மெட்ரிக் தொன் அரிசி எதிர்வரும் மூன்று மாதங்களில் நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் 2023ஆம் ஆண்டுக்கான 70 சதவீத பாடசாலை சீருடைகளை பரிசீலிக்கவுள்ளதாகவும் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

# 37 பேரடங்கிய தேசிய சபையை அமைக்க கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்



நாடாளுமன்றத்திலுள்ள சகல அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் 37 பேர் அடங்கிய 'தேசிய சபை' அமைக்க பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியை சீராக்குவதற்காக நாடாளுமன்றத்தின் சகல அரசியல் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் 'தேசிய சபை'ஐ அமைப்பதற்கு நேற்று முன்தினம் (07) நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த தீர்மானத்துக்கமைய, சபாநாயகர், தேசிய சபையின் தலைமைத்துவத்தை வகிப்பதுடன் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபை முதல்வர், ஆளுந்தரப்பு பிரதான ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் அந்த சபையின் உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் சகல அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் உள்ளடங்கும் வகையில், தேசிய சபைக்கு மொத்த அதிகாரபூர்வ உறுப்பினர்களின் எண்ணிக்கை 37 ஆகும்.

மேலும், இது தொடர்பான பிரேரணையை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஆயிரம் கிலோ மஞ்சளுடன் ஒருவர் கைது



சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படவிருந்த ஆயிரத்து 352 கிலோ உலர்ந்த மஞ்சள் தொகையுடன் சந்தேகநபரொருவர் கிளிநொச்சி, வேரவில் பிரதேசத்தில் வைத்து வெளிநாட்டு அதிரடிப்படை அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். வேரவில பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த மஞ்சள் தொகை உரப் பைகளினால் பொதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகபரிடம் ஒரு கிலோ மஞ்சள் தொகை இருப்பதாக விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய கிளிநொச்சி முகாம் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் (07) இரவு இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# இலவசமாக பொருட்களை அனுப்புவதாகக் கூறி கோடிக்கணக்கில் பணம் சுருட்டும் வெளிநாட்டுக் கும்பல்

(மன்னார் நகர் நிருபர்)

வெளிநாடுகளிலிருந்து பரிசுகள் அனுப்புவதாகவும் அல்லது உங்களுக்கு சீட்டிழுப்பில் கோடிக்கணக்கில் பணம் விழுந்துள்ளதாகவும் கூறி மக்களை ஏமாற்றும் கும்பல் தொடர்ச்சியாக இலங்கை மக்களை குறிவைத்து ஏமாற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதுடன், இவ்வாறான ஏமாற்றுக் கும்பலினால் பலர் ஏமாற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

வெளிநாட்டு தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளும் நபர் ஒருவர் நட்பாக பேசி தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்வதுடன், தான் வெளிநாட்டிலிருந்து பரிசு பொருள் அனுப்புவதாகவும் அதை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிப்பார் அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு குறித்த பரிசு பொருள் வந்துவிட்டதாகவும் அதை பெற்றுக்கொள்ள கட்டுநாயக்க விமான நிலையத்தில் வேலை செய்யும் ஒரு நபருடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவித்து இலங்கை தொலைபேசி இலக்கம் ஒன்றை வழங்குவார்.

அந்த தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளும்போது அந்த நபர் உங்களுக்கு ஒரு பரிசு பொதி வந்துள்ளது என தெரிவிப்பார். அதற்கு ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா உடனடியாக தான் வழங்கும் கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிடுமாறு கூறுவார். இதனை நம்பி பலர் அந்தக் கணக்கில் வைப்பில் இட்டதும் அந்த வெளிநாட்டு நபர் மற்றும் இலங்கை நபர்களின் தொலைபேசியும் வேலை செய்யாமல் போய்விடும். வங்கியில் இட்ட பணமும் சுருட்டப்படும்.

இவ்வாறான ஏமாற்றுக் கும்பலால் இலங்கையில் பலர் ஏமாந்துள்ளனர். இன்னமும் பலர் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இதேபோன்று அண்மைக்காலமாக குறைந்த விலையில் ஐபோன், கெமராக்கள், மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உள்ளதாகவும் உடனடியாக முற்பணம் செலுத்தினால் வீட்டுக்கே கொண்டுவந்து வழங்குவதாகவும் கூறி முற்பணத்தைப் பெற்று மோசடி மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. மேலும் சீட்டிழுப்பில் பல கோடி பணப்பரிசு கிடைத்துள்ளதாகவும் அப்பணத்தை விடுவிக்க ஒருதொகை பணம் செலுத்த வேண்டும் எனக் கூறி பணம் பறிக்கும் செயற்பாடுகளும் இலங்கையில் இடம்பெற்று வருகின்றன.

எனவே, மக்கள் இவ்வாறான மோசடி கும்பல்களிடம் அவதானமாக இருப்பதுடன், இவ்வாறான நபர்களுக்கு உங்கள் சார்ந்த தகவல்களை வழங்குவதை முற்றாக தவிர்க்க வேண்டும். இணையவழி ஊடாக பொருட்கள் வாங்குவது, பதிவுசெய்யப்படாத நிறுவனங்களுக்கு இணையவழி பண பரிவர்த்தனை மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

## ராஜபக்ஷக்களின்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பமான சபை அமர்வில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, நேற்றுமுன்தினம் சாணக்கியன் எம்.பி தெரிவித்த கருத்துக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் என்னுடைய பெயரையும் குறிப்பிட்டு, சாணக்கியன் எம்.பி. பேசியிருந்தது எனக்கு கவலையளிக்கின்றது. இதற்கு பதிலளிக்க எனக்கு விருப்பமில்லை. எனினும், எனக்கு வாக்களித்த மக்களுக்காக பதிலை வழங்க வேண்டியுள்ளது.

தமிழரசுக் கட்சியினரே இந்த நாட்டிலுள்ள இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு அடித்தாளமிட்டவர்கள் என்றால் யாராலும் மறுக்க முடியாது. இந்நிலையில், தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி சாபக்கேடு என சாணக்கியன் எம்.பி. குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், கிழக்கில் பாலம் கட்ட வேண்டாம், சிங்களவர் வந்துவிடுவர், கிராமங்களில் குளங்களை அமைக்க வேண்டாம், சிங்களவன் குடியேறிவிடுவான். குழந்தைகளுக்கு சிங்களம் கற்பிக்க வேண்டாம், தனி தமிழ் மாத்திரம் கற்பித்தால் போதும் என கிராமம் கிராமமாக சென்று கூறி சாணக்கியன் எம்.பியின் பாட்டனார், வீட்டில் தங்களுடைய வாரிசுகள் சிங்களம் மற்றும் ஆங்கிலம் கற்றுக்கொள்ள வாய்ப்பளித்தார்.


சிங்களப் பத்திரிகையை வாசிக்கும் அளவிற்கும் தமிழ்ப் பத்திரிகையை வாசிக்க முடியாதளவுக்கு உங்களை உருவாக்கியதே உங்களுடைய கட்சியின் சாபக்கேடாகும்.

கிழக்கு மாகாணத்திலுள்ள 500 பேருக்கு வேலைவாய்ப்பை கொடுத்தால் தமிழரசுக் கட்சியின் பேச்சை கேட்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். ஆனால், உங்களால் செய்யமுடியாதென எனக்குத் தெரியும். 20 வருடமாக இயங்காதிருந்த மாகாண சபையை இயங்குவதற்கு வாய்ப்பளித்த தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி உங்களுக்கு சாபக்கேடாக தெரிகின்றது. கிழக்கில் நாங்கள் கல்வி, தொழில் என எல்லா துறையிலும் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

எங்களோடு அரசியல் செய்து, குறிப்பாக ராஜபக்ஷக்களோடு நெருங்கி பழகிவிட்டு, தேர்தலில் வெல்வதற்காக தமிழரசுக் கட்சியோடு சரணாகதியடைந்த உங்களுக்கு எங்களை பற்றி பேசுவதற்கு என்ன அருகதையுள்ளது. தமிழ் விடுதலைப் புலிகளின் தேசிய மாநாட்டுக்கு யாரை அழைப்பது யாரை அழைக்கக்கூடாது என்பதை நாங்களே தீர்மானிப்போம். எனவே, என்னையோ எங்கள் மக்களை பற்றி பேசுவதற்கோ சாணக்கியன் எம்.பிக்கு எவ்வித உரிமையுமில்லை – என்றார்.

# புளிச்சாக்குளம் பிரதான வீதியில் குவியும் குப்பைகள்

## பொதுமக்கள் பெரும் அசௌகரியம்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தின் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபைக்குட்பட்ட உடப்பு, புளிச்சாக்குளம் பிரதான வீதியின் நான்காம் வட்டாரம் பகுதியில் குப்பைகளை கொட்டுவதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக அப்பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

"அங்கீகரிக்ப்பபடாத இடங்களில் குப்பைகளை வீசுவது தண்டனைக்குரிய குற்றமாகும்" என அந்தப் பிரதேசத்தில் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை மற்றும் உடப்பு பொலிஸ் என்பனவற்றினால் இணைந்து அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் அங்கு இவ்வாறு குப்பை கொட்டப்பட்டுள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இரவுநேரங்களில் மாத்திரமே இவ்வாறு கழிவுகள் உட்பட குப்பைகளை கொட்டுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அறிவுறுத்தல்களையும் மீறி இந்தப் பகுதியில் குப்பை போடப்பட்டுள்ளமையால் சுற்றாடல் மாசடைவதுடன், இந்தப் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் உடப்பு - புளிச்சாக்குளம் பிரதான வீதியூடாக பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இவ்வாறு குப்பைகளை கொட்டுவதை தடுத்து நிறுத்துவதற்கு முந்தல் பிரதேச செயலகம், உடப்பு பொலிஸார் மற்றும் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுகினறனர்.

இந்த விடயம் தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபைத் தலைவர் கே.தட்சணாமூர்த்தியிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக இருந்துவருகிறது. இதற்கு முன்னரும் குறித்த பகுதியில் குப்பைகள் கொட்டப்பட்டன.

அதன்பின்னர், அந்த இடத்தை எமது சபை ஊழியர்களைக்கொண்டு சுத்தப்படுத்தி தொடர்ந்தும் குப்பைகளை கொட்ட வேண்டாம் என்று அறிவித்தல் பலகை ஒன்றையும் காட்சிப் படுத்தினோம். எனினும், இரவுநேரங்களில்தான் குறித்த இடத்தில் குப்பைகளை கொட்டுகிறார்கள். இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருடனும் பேசியிருக்கிறேன்.

குப்பைகளை கொட்டும் இடத்தில் இரவுநேரங்களில் பொலிஸாரை பாதுகாப்புப் பணியில் அமர்த்தி இதனை முடிவுக்குக் கொண்டுவர ஒத்துழைப்பு வழங்குமாறும் பொலிஸாரிடம் கோரியிருக்கிறேன்.

அது சாத்தியமாகாத பட்சத்தில் அந்தப் பகுதியில் பாதுகாப்பு கெமராக்களை பொருத்தி அந்த இடத்தை தொடர்ச்சியாக கண்காணிக்க எண்ணியிருக்கிறேன். அந்த இடத்தில் குப்பைகளை கொட்டியவர்கள் தொடர்பில் ஆதாரபூர்வமாக தகவல் கிடைத்தால் பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை தலைவர் கே.தட்சணாமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

## இந்திய அமைதிப்படையால்தான்....

ஜப்பானும் இலங்கைக்கு ஆதரவாக நிற்கின்றன" என்று இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் சங்கர் தெரிவித்தார்.

இந்திய பீரங்கிப் படையணி தளபதியாக பணியாற்றி ஓய்வுபெற்ற லெப்.ஜெனரல் சங்கர், இலங்கையில் சீனாவின் தாக்கத்தை முறியடிக்க இந்தியாவும் ஜப்பானும் ஒன்றிணைய முடியும் என வலியுறுத்தியுள்ளார்.

சென்னை சீன ஆய்வு மையம் (C3S) ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் அவர் பேசினார்.

இலங்கையில் இந்தியாவின் இரட்டை நலன் குறித்து, இலங்கையின் ஸ்திரத்தன்மை மற்றும் பிராந்தியத்தில் சீன செல்வாக்கை ஓரங்கட்டுவதென பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

இலங்கையின் சர்வதேச நாணய நிதியம் பேச்சுவார்த்தையின்போது, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வாஷிங்டன் டிசியில் இருப்பதையும், இலங்கைக்கு தொடரும் இந்தியாவின் தாராளமான உதவியையும் அவர் சுட்டிக்காட்டினார்.

"ஜப்பானும் இலங்கையும் 1952ஆம் ஆண்டுமுதல் நல்லுறவைக்கொண்டிருக்கின்றன, ஜப்பான் இலங்கையின் முக்கிய கடனாளியாகும். ஜப்பான் மானியங்கள், கடன் உதவி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, ஐ.நா. முகவர்கள், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பானிய மற்றும் சர்வதேசம் மூலம் ஆதரவை வழங்குகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், உயர்தர உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவித்தல், உள்ளடக்கிய வளர்ச்சிக்கான வளர்ச்சி ஒத்துழைப்பு, பாதிப்புகளைத் தணித்தல் மற்றும் சுனாமி நிவாரணம் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கையை ஜப்பான் எப்போதும் கொண்டுள்ளது" என்று லெப்டினன்ட் ஜெனரல் சங்கர் கூறினார்.

எவ்வாறாயினும், இந்திய அமைதிப்படை, விடுதலைப் புலிகள் காலத்தில் இருந்ததைப் போல், இந்தியா மீண்டும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் கருதக்கூடாது என்று அவர் எச்சரிக்கிறார். இது இந்தியாவை ஓரங்கட்டுவதற்கு வழிவகுத்தது மற்றும் சீனா இலங்கைக்குள் நுழைவதற்கான இடத்தை உருவாக்கியது என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

சீனாவின் பொருளாதார மந்தநிலை, உள்நாட்டுப் பிரச்சினைகள் மற்றும் தாய்வான் மற்றும் அமெரிக்கா மீதான அதன் ஆர்வத்தில் இந்தியாவின் வாய்ப்பு உள்ளது என்று அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மீது செல்வாக்கு செலுத்தும் ஏனைய நாடுகள் தொடர்பில், அமெரிக்காவும் பாகிஸ்தானும் பாரிய கடன் வழங்குனர்களாக இருக்கவில்லை எனவும், அதற்குப் பங்கு உண்டு எனவும் அவர் கூறினார்.

ஐஎம்எவ் பிணை எடுப்பு வருவதற்கும், இந்தியாவுடன் மூலோபாய ரீதியாக ஒன்றிணைவதற்கும் அமெரிக்காவின் ஒப்புதல் அவசியம். இந்தோ-பசிபிக் மூலோபாயத்தை வலுப்படுத்தும் இந்த வாய்ப்பை அமெரிக்கா இழக்காது.

இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்ள அமெரிக்கா முயற்சிக்கும் - என்று அவர் கருத்து தெரிவித்தார்.

மேலும், இலங்கையுடன் பாகிஸ்தான் எப்போதும் நல்லுறவைக்கொண்டிருந்ததுடன், விடுதலைப் புலிகள் காலத்தில் ஆயுதங்களை வழங்கிய பிரதான நாடாக பாகிஸ்தான் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் கடற்படைக் கப்பலான பிஎன்எஸ் தைமூர் அண்மையில் கொழும்பில் நிறுத்தப்பட்டது மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான கடற்படைப் பயிற்சி ஆகியவை பாக்-இலங்கை உறவுகளின் நல்ல குறிகாட்டியாக குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் செல்வாக்கு (சீனாவின் உத்தரவின்பேரில்) இலங்கையில் ஓரங்கட்டப்படுவதை உறுதிசெய்ய இந்தியா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்திய இராணுவத்தில் பணியாற்றிய மூத்த இராணுவ புலனாய்வு நிபுணர் கேணல் ஆர். ஹரிஹரன் (ஓய்வு), இலங்கை இந்தோ-பசிபிக் பகுதியில் ஒரு மூலோபாய மையமாக உள்ளது என்று கூறினார்.

இலங்கையின் புவிசார் மூலோபாய நிர்ப்பந்தங்கள் பற்றி விரிவாக குறிப்பிட்டு, அட்லாண்டிக் மற்றும் பசுபிக் பெருங்கடல்களுக்கு நடுவில் இருப்பதாகவும், சாதகமான வெப்பமண்டல காலநிலையைக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையர்கள் இந்தியாவையும் சீனாவையும் எப்படிப் பார்த்தார்கள் என்பது பற்றி, இந்தியா 29 கிலோமீற்றர் தொலைவில் (தெற்கு மாநிலமான தமிழ்நாட்டின் சில புள்ளிகளில் இருந்து), சீனா 2000 கிலோமீற்றருக்கும் அதிகமாக இருப்பதால், எந்தவொரு பிரச்சினையிலும் இந்தியாவின் எதிர்வினை குறித்து இலங்கை தரப்பு எப்போதும் சிந்திக்கும் என்று அவர் கருதுகிறார்.

தொலைவில் இலங்கை ஒரு மூலோபாய மையமாகும், அதன் வெளியுறவுக் கொள்கையானது பௌதீக மற்றும் புவியியல் காரணிகளால் வழிநடத்தப்படுகிறது என்றும், கொழும்பு ஒரு நல்ல ஒட்டுக்கேட்கும் இடம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக தினித் நியமனம்



அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர் தினித் சிந்தக்க கருணாரத்ன நேற்று (08) அவரின் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இதற்கு முன்னர் அந்தப் பதவியில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட மொஹான் சமரநாயக்க கடமையாற்றி வந்தார்.

பத்து ஆண்டுகளாக ஊடகவியலாளராக கடமையாற்றியுள்ள கருணாரத்ன, ஜனாதிபதியின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

# இராஜகுலேந்திரா காலமானார்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் பேரவை உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா நேற்று இந்தியாவில் காலமானார்.

அவரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

சட்டத்தரணி இராஜகுலேந்திரா சிறந்த பேச்சாளர் என்பதுடன், தமிழ் பற்றாளருமாவார்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

சிறு விளம்பரம்

**வெற்றி நிச்சயம்**

**உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒரு முறை என்னை தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித்தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, காதல், கணவன், மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்துவிட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு. நினைத்தது நினைத்தபடி நடக்க உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப் புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 0192687 www.facebook.com / Srimath Suwamiji**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, செப்டெம்பர் 09ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# நெருக்கடியிலிருந்து மீள பிரிட்டனை நாடலாம்!

அரசியல் கருத்துக்கணிப்புகள் தெரிவித்தமைக்கு அமைவாக லிஸ் ட்ரஸ், பிரிட்டன் பிரதமர் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார். அவருக்கும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்குக்கும் இடையே உள்ள வாக்கு வித்தியாசம் எதிர்பாராதது.

மார்க்ரட் தட்சர், தெரேசா மே ஆகியோருக்கு அடுத்ததாக பிரிட்டனின் மூன்றாவது பெண் பிரதமர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் லிஸ் ட்ரஸ். மொத்தம் உள்ள 1,72,437 வாக்குகளில் ட்ரஸுக்கு 81,326 வாக்குகளும் (57.4%), சுனக்குக்கு 60,399 வாக்குகளும் (42.6 %) கிடைத்தன. தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகளுக்கு முற்றிலும் மாறாக இருவருக்கும் இடையேயான வாக்கு இடைவெளி அதிகரித்திருக்கிறது.

பிரிட்டன் அரசியலமைப்புச் சட்டப்படி ஆளும் கட்சியின் தலைவரே பிரதமராகப் பதவி வகிப்பார். அந்த வகையில், "பார்டிகேட் ஊழல் எனப்படும் கொரோனா கால கட்டுப்பாடுகளை மீறியதால் எழுந்த சர்ச்சையையடுத்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் பிரதமர் பதவியிலிருந்தும், விலகினார். முன்னதாக, நிதியமைச்சராக இருந்த ரிஷி சுனக் இராஜினாமா செய்ததன் மூலம் ஏற்பட்ட நெருக்கடி பொரிஸ் ஜோன்சன் பதவி விலகியதற்கான முக்கியமான காரணமாக கூறப்படுகிறது.

பொரிஸ் ஜோன்சன் விலகலையடுத்து ஆளும் கட்சித் தலைவர் பதவிக்கு லிஸ் ட்ரஸ், ரிஷி சுனக் உள்ளிட்ட 8 பேர் போட்டியிட்டனர். கட்சி எம்.பிக்கள் மட்டும் வாக்களிக்கும் ஆரம்ப சுற்றுப் போட்டிகளில் ரிஷி சுனக்கே முன்னிலை வகித்தார். எம்.பிக்கள் மத்தியில் அவருக்கு இருந்த அபாரமான செல்வாக்கை அது நிரூபிப்பதாக இருந்தது. இதனால், ரிஷி சுனக் பிரதமராவார் என்கிற எதிர்பார்ப்பும் உருவானது. ஆனால், கட்சி உறுப்பினர்கள் வாக்களிக்கும் சுற்றில் ரிஷி சுனக் சரிவைச் சந்தித்தார். கட்சியில் லிஸ் ட்ரஸுக்கு இருக்கும் அபார செல்வாக்கை அது நிரூபித்தது.

பணவீக்கம், விலைவாசி உயர்வு உள்ளிட்ட பொருளாதாரப் பிரச்சினைகள் பிரிட்டனை வதைத்து வருகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு கடுமையாக அதிகரித்துள்ளது. வரிக் குறைப்பு குறித்து வாக்குறுதி அளிக்காத ரிஷி சுனக், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நடவடிக்கையில் முதலில் ஈடுபடுவேன்; நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளிக்கத் தயாரில்லை என பிரசாரத்தின்போது தெரிவித்தார்.

தேர்தலில் வெற்றிபெற்றால் உடனடி வரிக் குறைப்பை அமல்படுத்தப்போவதாக லிஸ் ட்ரஸ் அளித்த வாக்குறுதி அவரது வெற்றிக்குப் பெரிதும் கைகொடுத்திருக்கிறது. கட்சி உறுப்பினர்களையும் தாண்டி ரிஷி சுனக்கின் இந்தப் பிரசாரம் வரவேற்பைப் பெற்றாலும், அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. குறிப்பாக, கன்சர்வேட்டிவ் கட்சியின் இளம் வாக்காளர்கள் மத்தியில் ரிஷி சுனக்குக்கு இருந்த ஆதரவு, மூத்த உறுப்பினர்கள் மத்தியில் இல்லை.

நிதியமைச்சராக, கொரோனா நோய்த்தொற்று காலத்தின்போது பொருளாதார நெருக்கடியை திறம்பட சமாளித்தவர் என்கிற பெயர் ரிஷி சுனக்குக்கு இருந்தது. அதேபோல் நாட்டின் வெளியுறவு அமைச்சராகவும், ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறும் பிரக்ஸிட் நடவடிக்கையின்போது சிறப்பாகச் செயல்பட்டதற்காகவும் செல்வாக்கு பெற்றிருந்தார் லிஸ் ட்ரஸ். அத்துடன், இத்தேர்தலில் நிறமும், இனமும் முக்கிய பங்கு வகித்ததையும் மறுக்க முடியாது.

தேர்தலில் வெற்றிபெற்றிருந்தால் பிரிட்டனின் வெள்ளையர் அல்லாத முதல் பிரதமர் என்கிற பெருமையை சுனக் பெற்றிருப்பார். அது கைகூடாத நிலையில், தேர்தலில் லிஸ் ட்ரஸுக்கு கடும் போட்டியை அளித்தவர் என்கிற பெயர் அவருக்குக் கிடைத்திருக்கிறது.

இதற்கிடையில், பிரித்தானிய அரசாங்கத்தில் கபினட் அமைச்சராக நியமிக்கப்பட்ட முதல் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த நபர் என்ற வரலாறை ரணில் ஜயவர்தன படைத்துள்ளார். புதிய பிரித்தானிய பிரதமர் லிஸ் ட்ரஸின் முதலாவது அமைச்சரவையில் சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளராக ரணில் ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். ரணிலின் தந்தையாகிய நளின் ஜயவர்தன இலங்கை வம்சாவளியினர் ஆவார். ரணிலின் தாயாகிய இந்திரா ஜயவர்தனவோ இந்திய வம்சாவளியினர் ஆவார்.

பிரிட்டனின் புதிய பிரதமருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மற்றும் இங்கிலாந்துக்கு இடையிலான இருதரப்பு மற்றும் கலாசார உறவுகள் தொடர்ந்து வளரும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இலங்கை இப்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் மீளெழுவதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு தேவை. அந்தவகையில் இலங்கையுடன் தொடர்பாடல்கள் உள்ளவர்களை பயன்படுத்தி, பிரிட்டனின் புதிய அரசின் ஒத்துழைப்பையும் பெற்று, முன்னோக்கிச் செல்ல அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். பிரிட்டனின் புதிய பிரதமருக்கு வாழ்த்துகள்.

# முஸ்லிம் அரசியலை நெறிப்படுத்தியவர் பாக்கீர் மாக்கார்

## - நினைவுகூருகிறார் ரவூப் ஹக்கீம் -

(முன்னாள் சபாநாயகர், தேசமான்ய மர்ஹூம் எம்.ஏ. பாக்கீர் மாக்காரின் நினைவு தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை வானொலி செய்திச் சேவைக்கு சில வருடங்களுக்கு முன் வழங்கிய உரை இது. பாக்கீர் மாக்காரின் 25ஆவது நினைவுதினம் நாளை சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படுவதால் இக்கட்டுரை பிரசுரமாகிறது.).

இலங்கை முஸ்லிம்களின் அரசியலை உரிய முறையில் நெறிப்படுத்தியவர்களின் வரிசையில் முன்னணியில் திகழும் ஆளுமைகளில் ஒருவரான முன்னாள் சபாநாயகர் தேசமானிய மர்ஹூம் எம்.ஏ. பாக்கீர் மாக்கார் மறைந்து 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதையிட்டு அன்னாரை நன்றியெய்தலோடு நினைவுபடுத்துகின்றோம்.

மர்ஹூம் எம்.ஏ.பாக்கீர் மாக்கார் 1917 மே 12ஆம் திகதி பேருவளை மருதானை மண்ணில் ஹக்கீம் விழாவில் புகழ்பூத்த யூனானி மருத்துவ பரம்பரையில் ஹக்கீம் அலியார் முஹம்மத் மரிக்கார் மற்றும் ராயிழா உம்மா தம்பதிகளின் அருமை புதல்வராக அவதரித்தார்.

ஆரம்ப கல்வியை கொழும்பு புனித செபஸ்டியன் வித்தியாலயத்தில் கற்ற அவர், பின்னர் கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் மர்ஹூம் ரி.பி.ஜாயா அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் அவரது கண்காணிப்பில் மாணவராக பயின்ற காலம் மிகப் பெறுமதியான காலமாக கருதப்படுகின்றது.





மர்ஹூம் ரி.பி.ஜாயா இந்த நாட்டிற்கு சுதந்திரத்தை பெற்றுத் தந்துள்ள தேசிய வீரர்களில் ஒருவராக கணிக்கப்படுகின்ற - அந்தஸ்தில் இருக்கின்ற அவர், மர்ஹூம் பாக்கீர் மாக்காரை அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவராகவும் இருந்தார் என்ற உண்மை பலரும் அறிந் திருக்கமாட்டார்கள்.

ஏனென்றால் 1947ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்திற்கான முதலாவது தேர்தலில் மர்ஹூம் ரி.பி. ஜாயாவை கொழும்பு மத்திய தொகுதியில் வெற்றிபெறச் செய்கின்ற பணியில் பாக்கீர் மாக்கார் முன்னணியில் நின்று பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. அதன்மூலம்தான் அவர் தனக்கான அரசியல் அனுபவத்தை முதலில் பெற்றுக்கொண்டார் என்று வரலாறு சொல்கின்றது.

அவர்கள் தமது சொந்த அரசியலில் கால் பதிக்கின்ற விவகாரம் அவர், பேருவளை நகரசபை உறுப்பினராக 1950ஆம் ஆண்டு போட்டியின்றி தெரிவாகிய முதலாவது வருடத்திலேயே பேருவளை நகர சபையின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டமையானது அன்றைய மக்கள் மத்தியில் அவருக்கிருந்த செல்வாக்கை மிகத் தெளிவாக அடையாளம் காட்டப்படுகின்ற நிகழ்வாகும்.

1960ஆம் ஆண்டுவரை உள்ளூராட்சி மட்டத்தில் தனது பங்களிப்புச் செய்த அவர், பேருவளை தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்கு முதலாவதாக தெரிவானார். பேருவளை தொகுதி குறித்து பேசுகின்றபோது அவருடைய சொந்த பிறந்த மண்ணாக கணிக்கப்படும் இந்தத் தொகுதியை இரட்டை அங்கத்துவ தொகுதியாக பிரகடனப்படுத்துகின்ற முயற்சிக்கு முன்னர், அதாவது 1950களின் பிற்பகுதியில் நியமிக்கப்பட்டிருந்த தல்கொடப்பிட்டிய எல்லை நிர்ணய குழுவிற்கு முன்னாலே பலர் சகிதம் அகில இலங்கை முஸ்லிம் லீக்கை பிரதிநிதித்துவப்படுத்தி நீண்டநேரம் வாதாடி முஸ்லிம்களுக்கான இரட்டை அங்கத்துவ தொகுதியொன்றை பேருவளை பிரதேசத்தில் அமைத்தாக வேண்டும் என்ற முயற்சியில் அரும் பங்காற்றிய ஒருவராக அவர் அடையாளம் காணப்படுகின்றார்.

இறுதியில் அவருடைய முயற்சியின் பயனாக உருவாகிய பேருவளை இரட்டை அங்கத்துவ தொகுதிக்கு அவரே அந்தத் தொகுதியின் முதலாவது உறுப்பினராகவும் அந்தத் தொகுதியின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவாகுகின்ற வாய்ப்பையும் அவர் பெற்றார்.

தல்கொடப்பிட்டிய ஆணைக்குழுவுக்கு முன்னால் சாட்சியமளிக்கும்போது இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கான முயற்சியில் தனி அங்கத்துவ தொகுதியினூடாக மாத்திரம் அதை அடைவது சாத்தியமாகாது. போதியளவு முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அவர்களுடைய தேசிய விகிதாசாரத்திற்கேற்ப அடைவதற்கான ஒரு முக்கியமான வழி. ஆங்காங்கே முஸ்லிம்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் இரட்டை அல்லது பல அங்கத்துவ தொகுதிகளை அமைப்பதன் மூலம் மாத்திரம்தான் சாத்தியமாகும் என்பதை நன்கு உணர்ந்திருந்த மர்ஹூம் பாக்கீர் மாக்கார், தல்கொடப்பிட்டிய ஆணைக்குழுவுக்கு முன்னால் இவ்விடயம் தொடர்பில் சமர்ப்பித்த வாதங்கள் மூலமாக இந்தச் சமூகம் அடைந்த நன்மைகளை இன்று மிகவும் நன்றியோடு நினைவுபடுத்தப்படவேண்டிய ஒன்றாக இருக்கின்றது

குறிப்பாக, அவருடைய இன்னுமொரு வாதமாக அண்மையில் நியமிக்கப்பட்டிருந்த எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு முன்னால் சென்றிருந்தபோது அவதானித்த விடயம்தான் முழு நாட்டையும் ஒரு தொகுதியாக கருதியாவது சரியான பிரதிநிதித்துவங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்ற பெரும்பான்மை இனங்களுக்கு ஒரு பிரத்தியேகமான ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்ற வாதத்தை முதலில் முன்னிறுத்தி வாதாடிய ஒருவராக மர்ஹூம் பாக்கீர் மாக்கார்நினைவுபடுத்தப்படுபவராக இருக்கின்றார். இதையும் இங்கு பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அதேபோல் பேருவளை தொகுதி என்பது இந்த நாட்டு முஸ்லிம்களின் ஆன்மீக வரலாற்றில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்ற ஒரு விடயமாகும். அந்த பிரதேசத்தில் இருக்கின்ற தர்காக்கள் மற்றும் இலங்கை இருக்கின்ற மிகப் பழைமைவாய்ந்த பள்ளிவாசலான அப்ராஹ் பள்ளிவாசல் ஆரம்பகாலத்தில் அரபு வணிகர்கள் வந்து இலங்கையில் தரையிறங்கிய இடமாகவும் பேருவளை பிரதேசம் கருதப்படுகின்றது.

மேலும் அங்கிருக்கின்ற பெரிய ஆன்மீக நிறுவனத்தை இன்று முஸ்லிம்கள் அனைவருக்கும் ஆன்மீக லௌகீக கல்வியை இரண்டறக் கலந்து கற்பிக்கப்படுகின்ற கலாபீடமாக மாறியிருக்கின்ற முஸ்லிம்களின் அறிவின் கலங்கரை தீபமாக அழைக்கப்படுகின்ற ஜாமிஹா நளீமிய்யா இந்த பிரதேசத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பேருவளை பிரதேசமானது மாணிக்க வியாபாரிகளையும் செல்வந்தர்களையும் உள்ளடக்கிய பிரதேசமாக கணிக்கப்பட்ட போதிலும் கூட, அந்தப் பிரதேசத்தில் அரசியல் என்ற விடயம் பேசப்படும்போது மர்ஹூம் பாக்கீர் மாக்கார் என்ற நாமம் புறத்தொடுக்கப்பட முடியாதளவுக்கு பாரிய தடயத்தை விட்டுச் சென்றிருக்கின்றார் என்பதை நாங்கள் எல்லோரும் உள்ளம் கொள்கின்றோம். அவருடைய வாரிசாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்நாடாளுமன்ற அரசியலிலிருந்து 1989ஆம் ஆண்டு விலகிய பிற்பாடு அதே பிரதேசத்தில் புதிய விகிதாசார முறையில் நடைபெற்ற முதலாவது தேர்தலில் அவரது புதல்வர் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி அமைச்சராகவும், பிரதி அமைச்சராகவும் அரசாங்கங்களில் பதவி வகித்தார் என்பதும் நாங்கள் அறிந்ததே. இப்போதும் அவர் எம்.பியாக தந்தை வழியில் தனயன் சேவையாற்றிக்கொண்டிருக்கிறார்.

மறைந்த பாக்கீர் மாக்காரின் அரசியல் பயணத்தை பார்க்கும்போது ஒரு நாட்டின் முக்கிய பதவிகளான ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளுக்கு சிறுபான்மையினர் தெரிவுசெய்யப்படுவது அபூர்வமான விடயமாக உள்ளபோதிலும், இந்த இலங்கை நாட்டின் அரசியல் வரலாற்றில் மூன்று முஸ்லிம் தலைமைகள் சபாநாயகர் அந்தஸ்தில் இருந்தார்கள் என்பது முழு முஸ்லிம் சமூகமும் பெருமைப்படுகின்ற விடயமாகவுள்ளது. முதலாவதாக இஸ்மாயீல், 1978ஆம் ஆண்டளவில் பாக்கீர் மாக்காரும் அதற்கு பிற்பாடு எம்.எச்.முஹம்மத்தும் அந்தப் பதவியில் அமர்த்தப்பட்டமை மிக முக்கியமான விடயங்களாகும்.

மர்ஹூம் பாக்கீர் மாக்கார், எம்.எச்.முஹம்மத் போன்றோர் அகில இலங்கை முஸ்லிம் லீக் என்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியின் இணை அமைப்பின் மூலம் மிகப்பெரிய சமூக சேவையை மாத்திரமல்ல, முஸ்லிம்களை அரசியல் மையப்படுத்துகின்ற பணியிலும் மிகத் தீவிரமாக பங்காற்றியுள்ளார்கள் என்பது மிக முக்கியமாக உள்ளங்கொள்ளவேண்டிய விடயமாகும்.

குறிப்பாக, 1960 மார்ச் தேர்தலில் தெரிவுற்ற அவர், அதன்பின்னர் மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் அதாவது நான்கைந்து மாதத்துக்குள் நிறைவுபெற்ற நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் மீளவும் ஜூலையில் நடைபெற்ற தேர்தலின்போது தமக்கான ஆசனத்தை மீட்டிக்கொள்ள முடியாமல் போனாலும், 1965ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் மூலம் மீண்டும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினார்.

ஐந்து வருட காலம் அமைந்த ஒரு தேசிய அரசாங்கத்தில் மிக முக்கியமான நாடாளுமன்ற உரைகளை ஆற்றியது மாத்திரமல்ல, தன்னுடைய கட்சியையும், கட்சிக்குள் இருந்த உள்முரண்பாடுகளையும் தீர்க்கின்ற விடயத்திலும் கூட, அவருடைய தீவிரமான பங்களிப்பு முக்கியமாக நினைவுகூரப்படவேண்டிய விடயமாகும்.

1970ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியை தழுவினாலும், 1977ஆம் ஆண்டு பெரு வெற்றியடைந்த பின்னணியில் ஏறத்தாழ ஆறில் ஐந்து பெரும்பான்மையோடு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையில் அமையப்பெற்ற நிலையில் முதலில் பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்ட அவர் ஒரு வருட காலத்திற்குள்ளேயே சபாநாயகர் பதவிக்கு அமர்த்தப்படும் வாய்ப்பை பெறுகின்றார்.

அதிலும் விசேடமான அம்சம் என்னவென்றால், காலிமுகத்திடலில் அமைந்துள்ள இன்றைய ஜனாதிபதி அலுவலகமுமான அன்றைய நாடாளுமன்றத்தில் இறுதி சபாநாயகராகவும், இன்று ஸ்ரீ ஜயவர்தன புறக்கோட்டேயில் அமைக்கப்பட்டுள்ள புதிய நாடாளுமன்றத்தில் முதலாவது சபாநாயகராகவும் இருந்த பெருமையை மர்ஹூம் பாக்கீர் மாக்கார்பெற்றமை அவர் அபூர்வமாக பெற்ற மகிமையாக கருதப்படுகின்றது.

இந்த அடிப்படையில் அவரின் பணிகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சரவை உறுப்பினராகவும், சபாநாயகராகவும் தொடர்ந்து 16 ஆண்டுகள் தனது வாழ்க்கையினை இலங்கை அரசியலோடு செலவிட்டுள்ளார். அவரது நாடாளுமன்ற விவாதங்களை அடிப்டையாகக்கொண்டு நோக்குகையில், இன்றும்கூட அவரின் விவாதங்களில் கையாண்ட மிகத் திறமையான வாக்கு வன்மையை மெச்சக்கூடிய வகையில் அவரது நாடாளுமன்ற உரைகள் இருந்துள்ளன.

அது மாத்தரமல்ல, முஸ்லிம்களுக்கு உரித்தான மும்மொழித் திறமை என்ற விடயத்திலும் இயன்றவரை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மிக ஆற்றலோடு பேசக்கூடிய ஒருவராக இருந்தபோதிலும், தமிழிழும் மிக திறமையாக பேசக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தார்.

1998 ஜனவரி 20ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றம் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் மீது அனுதாபப் பிரேரணையொன்றை முன்வைத்தது. அந்தப் பிரேரணையின்போது எமது முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் உரையாற்றுகின்றபோது, "தாம் சட்டக் கல்லூரியில் பிரவேசித்ததிலிருந்து அன்னாரை 25 ஆண்டுகளுக்கு அதிகமாக நன்கு அறிந்திருந்ததாகவும், அவரது மனிதாபிமான பண்புகளால் பெரிதும் கவரப்பட்டதாகவும், குறிப்பாக, அவரது சன்மார்க்க பற்றை பற்றி மிக விரிவாக சிலாகித்துப் பேசினார். அத்தோடு ஒரு கண்ணியவான் அரசியல்வாதியாக அவர் திகழ்ந்துள்ளார். அமைதி, சமாதானம் பற்றி போதிக்கின்ற விடயத்திலும் இதனை போதிப்பவர்கள் உள்ளமளவில் அவர்களுடைய ஆளுமை இருந்தாக வேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக மர்ஹூம் பாக்கீர் மாக்கார்திகழ்ந்துள்ளார்"என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் ஸ்தாபக உறுப்பினராக இருந்த அவர், அதனடிப்படையில் முஸ்லிம் லீக் இளைஞர்களுக்குரிய வழிகாட்டல்களை வழங்கி அவர்களை நெறிப்படுத்துவதற்காக அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனத்தை நிறுவி, அதன்மூலம் அவர் ஆற்றிய பணி மிகவும் சிறப்பாக மெச்சப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்றும் கூட, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளனம் என்பது அவரது புதல்வர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் நெறிப்படுத்தலில் மிகச் சிறப்பாக பணியை பல இடங்களிலும் செய்து வருகின்றது என்பதும் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட பல பிரச்சினைகள் அனர்த்தங்களின்போது அவர்கள் காட்டுகின்ற அக்கறையும், அங்காங்கே சென்று சேகரிக்கின்ற தகவல்களும், உதவிக் கொடைகளும், தலையீடுகளும் எடுத்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மர்ஹூம் பாக்கீர் மாக்கார் நாடாளுமன்ற உரைகளை ஆற்றும் சந்தர்ப்பங்களில் உரையிலிருக்கும் சுவாரஸ்யம் கருதி கருத்தாழமிக்க அம்சங்கள் காரணமாக நாடாளுமன்றத்தில் அன்று இருந்த மிகப் பெரிய ஆளுமைகளான அண்ணன் அமிர்தலிங்கம், அண்ணன் சிவசிதம்பரம், எஸ்.டி.பண்டாரநாயக்க, பீற்றர் கெனமன், என்.எம்.பெரேரா, எஸ்.ஏ.விக்கிரமசிங்க, டி.பி.இலங்கரத்ன போன்ற பலரும் அவர் பேசுகின்றபோது அடிக்கடி குறுக்கீடுகள் செய்வது வழக்கமாகும். அதற்குப் பதிலளிக்கையில், ஆணித்தரமாகவும் சுடச்சுட, காரசாரமாகவும் கருத்துகளை முன்வைத்திருக்கின்றமை நாடாளுமன்ற ஹன்சார்ட்களில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவரது நாடாளுமன்ற உரைகளை தனிப் புத்தமாக வெளியீடுவதில் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வர் ஒரு காலகட்டத்தில் அவரது செயலாளராகவும் பணியாற்றியவர் என்ற அடிப்படையில் அந்தப் பணியை சிறப்பாக செய்தார்.

இவ்வாறு பலவிதமாக இந்த சமூகத்தின் ஈடேற்றத்திற்காக பங்காற்றிய மிகப்பெரிய ஒரு முஸ்லிம் ஆளுமையாக அடையாளப்படுத்தப்படுகின்ற அவர், 1997 செப்டெம்பர் 10ஆம் திகதி தன்னுடைய 80ஆவது வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். எல்லாம் வல்ல இறைவன் அவரை பொருந்திக்கொள்ள வேண்டும்.

அதேநேரம் 2015ஆம் ஆண்டு ஜூலை அரசாங்கம் அவரது நினைவாக தபால் முத்திரையொன்றை அவர் கற்ற கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் வைத்து வெளியிட்டு கௌரவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- ★ 1776 – அமெரிக்கக் காங்கிரஸ் அதன் மாநிலங்களின் ஒன்றியத்துக்கு அதிகாரபூர்வமாக அமெரிக்க ஐக்கிய நாடு எனப் பெயரிட்டது.
- ★ 1791 – அரச தலைவர் ஜோர்ஜ் வொசிங்டன் நினைவாக ஐக்கிய அமெரிக்காவின் தலைநகருக்கு வொசிங்டன், டி.சி. எனப் பெயரிடப்பட்டது.
- ★ 1799 – பாஞ்சாலக்குறிச்சி கோட்டை பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது.
- ★ 1839 – ஜோன் ஏர்செல் முதலாவது கண்ணாடித் தட்டு ஒளிப்படத்தை எடுத்தார்.
- ★ 1892 – எட்வர்ட் எமர்சன் பேர்னார்ட் வியாழனின் மூன்றாவது சந்திரன் அமல்தியாவைக் கண்டுபிடித்தார்.
- ★ 1947 – முதல் தடவையாக மென்பொருள் வழு ஒன்று ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் கணினி ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ★ 1948 – கிம் இல்-சுங் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசை அதிகாரப்பூர்வமாக அமைத்தார்.
- ★ 1990 – சத்துருக்கொண்டான் படுகொலை: மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் 5 கைக்குழந்தைகள், 42 பத்து வயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் உட்பட 184 தமிழர் இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.
- ★ 2016 – வட கொரியா தனது ஐந்தாவதும், மிகப்பெரியதுமான அணுவாயுத சோதனையை மேற்கொண்டது.

# பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கத் தவறியமையே இன்று வெளிநாட்டு பால்மாவை எதிர்பார்க்கவேண்டிய நிலை எமக்கு

## மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் இராஜாராம் தெரிவிப்பு

*(செ.திவாகரன்)*

''பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க அரசு தவறியதாலேயே இன்று வெளிநாட்டு பால்மாவை எதிர்பார்க்கவேண்டிய நிலைக்கு இலங்கை மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அரசாலும், மாகாண சபைகளாலும் கால்நடை அபிவிருத்தி அமைச்சுகள் உருவாக்கப்பட்டு கால்நடைகள் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட்டபோதிலும் பால் உற்பத்தி அபிவிருத்தி செய்யப்படவில்லை'' - இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் பிரதான தொழில்களில் ஒன்றான கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. இதற்குக் காரணம், பால் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் ஊக்குவிப்பு உதவிகள் எதுவும் செய்வதில்லையென கால்நடை உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் பால் உற்பத்தியில் பிரதான இடமாக நுவரெலியா மாவட்டம் இருந்தது. ஆனால், தற்போது புண்ணாக்கின் விலை அதிகரிப்பு, கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகள் குறைவு, நல்ல இன கறவை பசுக்கள் பெற்றுக்கொள்வதில் சிரமம், அரசாங்கத்தால் கால்நடை வளர்ப்பவர்களை ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை போன்ற காரணங்களால் கால்நடை வளர்ப்பவர்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றார்கள்.

கடந்த 20 வருடங்களுக்கு முன் தேசிய பால் உற்பத்திக்காக அரசு பல நடவடிக்கைகளை செயற்படுத்தி வந்தது.

உதாரணமாக வெளிநாடுகளிலிருந்து நல்ல இன கறவைப் பசுமாடுகளை இறக்குமதி செய்து நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரச பால் பண்ணைகளான அம்பேவல மற்றும் போபத்தலாவ உட்பட பல அரச கால்நடை பாற்பண்ணைகளிலிருந்து வங்கிக் கடன் மூலம் நல்ல கறவைப் பசுக்களின் கன்றுக்குட்டிகளையும், பசுமாடுகளையும் வழங்கினர்.

அதேபோல் மாட்டுக்கொட்டகைகளை திருத்துவதற்காக அரச மிருக வைத்தியசாலைகள் மூலம் பொருட்கள் வழங்கப்பட்டன. கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால் அரச மிருக வைத்தியர்கள் மூலம் சிகிச்சை வழங்கப்பட்டது. ஆனால், தற்பொழுது மருந்து தட்டுப்பாட்டால் தனியார் மருந்தகங்களில் அதிக பணம் செலுத்தி மருந்து பெற வேண்டியுள்ளது. அதேபோல் நுவரெலியாவில் பல பிரதேசங்களில் அரச மிருக வைத்தியர்கள் இல்லாததால் தனியார் மிருக வைத்தியர்களிடம் செல்லவேண்டும். அவர்களுக்கு அதிக பணம் செலுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.



மலையக பெருந்தோட்டங்களில் தேயிலை தொழிலுக்கு அடுத்தபடியாக விவசாயமும், கால்நடை வளர்ப்பும் பிரதான தொழிலாக இருந்து வருகின்றன. ஆனால், இன்று புண்ணாக்கின் விலை உயர்வு, கால்நடைகளுக்கான வைத்திய சேவை குறைவினால் கால்நடை வளர்ப்பை கைவிட்டுள்ளனர். தற்பொழுது தோட்டப்பகுதியில் மாட்டுக்கொட்டகைகள் அமைப்பதற்கு தோட்ட நிர்வாகம் அனுமதி வழங்குவதில்லை. கடந்த காலங்களில் ஒவ்வொரு தோட்டங்களிலும் பொதுவான மாட்டுக்கொட்டகைகள் இருந்தன. அவ்வாறான மாட்டுக்கொட்டகைகளை தற்பொழுது காணமுடியவில்லை.

எனவே, பால் உற்பத்தியை அபிவிருத்திசெய்ய வேண்டுமானால் கடந்த காலங்களில் கால்நடைகள் வளர்ப்பிற்காக அரசால் முன்னெடுக்கப்பட்ட ஊக்குவிப்பு உதவிகளை மீண்டும் தொடர்வதற்கான வேலைத்திட்டத்தை அரசு முன்னெடுக்கப்பட வேண்டும்'' - என்றார்.

# எழுத்தாளர் - கவிஞர் பஹ்மி ஹலிம்தீனுக்கு தேசமான்ய - தேசகீர்த்தி விருதுகள்



*(மாத்தளை நிருபர்)*

மத்திய மாகாண கல்ஹின்னையைச் சேர்ந்த பஹ்மி ஹலிம்தீனுக்கு இலங்கை மனித உரிமைகளுக்கான சமாதான தூதரகத்தின் இலங்கையின் அதியுயர் கௌரவ விருதுகளான 'தேசமான்ய' மற்றும் 'தேசகீர்த்தி' விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

எழுத்தாளராகவும் கவிஞராகவும் திகழ்ந்து கொண்டிருக்கும் பஹ்மி அலிம்தீன் ஏறத்தாழ 170இற்கும் அதிகமான நூல்களை வெளியிட்டு சாதனை படைத்துள்ளார். அவர் கல்ஹின்னை தமிழ் மன்றத்தின் தற்போதைய நிர்வாக இயக்குநராக இருந்துவருகிறார்.

எழுத்தாளராகவும் கவிஞராகவும் மட்டுமன்றி பாடலாசிரியராகவும் புகழ்பெற்ற இவர், கம்பளை சாஹிரா கல்லூரி, மாத்தளை சாஹிரா கல்லூரி மற்றும் மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரி போன்றவற்றின் பழைய மாணவருமாவார். இவர் கல்ஹின்னையின் மூத்த கவிஞரும் ஆசிரியருமான கலாபூஷணம் கல்லூட்டு கவிராயர் மர்ஹூம் ஹலிம்தீனின் மூத்த புதல்வராவார்.







**நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கிறேட்வெஸ்டன் பாடசாலையில் நடத்தப்பட்ட பாடசாலை மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகள் மற்றும் ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் தலைமையில் நேற்று முன்தினம் (7) நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (தலவாக்கலை நிருபர்)**

# மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை சுற்றுவட்டாரம் அதிரடிப்படையால் சுத்திகரிப்பு





*(மஸ்கெலியா நிருபர்)*

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் நேற்று மாவட்ட வைத்திய அதிகாரி எச்.ஏ.இர்ஜாட் தலைமையில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் செயலாளர் க.இராஜ்குமார் மற்றும் உறுப்பினர்கள் அடங்கலாக ரக்காடு கிராமத்திலுள்ள அதிரடிப்படையினர் இணைந்து சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர். வைத்தியசாலை சுற்று வட்டாரங்களிலுள்ள அனைத்து பற்றைகளும் அகற்றப்பட்டு மஸ்கெலியா பிரதேச சபையின் டிரக் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டன.





# அரசியல் கைதிகளை பார்வையிட்டு அவர்களது நிலைவரத்தை பெற்றோரிடம் தெரியப்படுத்த வேண்டும்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் கோரிக்கை

*(யாழ். நிருபர்)*

மெகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு அவர்களது நிலைவரம் தொடர்பாக அரசியல் கைதிகளது பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மனிதநேயத்தோடு செயல்படக்கூடிய அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம் - என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் உறவினர்கள் யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே முருகையா கோமகன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பேசப்பட்டுவரும் நிலையில், அண்மைக் காலங்களில் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

அவர்களுடைய உறவுகள் எங்களுடன் தொடர்புகொண்டு சிறையிலுள்ள சூழல் தொடர்பில் தவிப்புடன் இருக்கின்றார்கள். இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகள் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதே நேரத்தில் அரசியல் கைதிகளையும் மகசின் சிறைச்சாலைக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு அவர்களது நிலைவரம் தொடர்பாக அரசியல் கைதிகளது பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மனிதநேயத்தோடு செயல்படக்கூடிய அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜனாதிபதியை தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து, எம்மால் கையளிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதில் 24 பேர் தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றார்கள். பத்து வழக்குகளில் 22 பேரும், தண்டனை விதிக்கப் பட்டவர்கள் மேன்முறையீடு செய்தவர்கள் என 24 பேருமாக மொத்தம் 46 தமிழ் அரசியல் கைதிகள் காணப்படுகின்றனர். உடனடியாக 24 பேரை விடுதலை செய்ய முடியும் என ஜனாதிபதி கூறியதுடன், நீதி அமைச்சர் ஐ.நாவுக்கு சென்றிருப்பதால் அவர் வந்த பின்னர் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயம் ஐ.நா. மனித உரிமை அமர்வு முடிவடைவதற்கு முன்பாக இடம்பெற வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இவ்விடயத்தில் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்ணை மூடிக்கொண்டு இருக்காது செயற்பட வேண்டும். அனைவருக்கும் இதில் பொறுப்பு இருக்கின்றது. நல்லாட்சி அரசு காலத்திலும் நாம் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம். அதே விடயம் இந்தக் காலப்பகுதியிலும் இடம்பெறுமா என்பது தொடர்பாக நாம் கவலையடைகின்றோம்.

குற்றம் ஒப்புதல் வாக்குமூலம் என விடுதலை செய்யப்பட்டவர்கள் அழைக்கப்பட்டு அன்றிரவே சட்ட மா அதிபர் திணைக்களத்தால் மீண்டும் வழக்குகளை தாக்கல் செய்து அதற்கான வழக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்திலும் 15ஆம் திகதி பதுளையிலும் உள்ள நீதிமன்றத்திலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இவர்கள் 2009ஆம் ஆண்டு கைதுசெய்யப் பட்டவர்களுடன் 14 வருடங்களுக்குப் பிறகு இவ்வாறான ஒரு துன்பியல் சம்பவமொன்று இடம்பெற்றிருக்கின்றது.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யக்கூடாது என்ற நோக்கில் அரசாங்கம் செயற்படுகின்றதா என்பதை மீண்டும் எடுத்துக்காட்டும் சம்பவமாக இது காணப்படுகிறது. அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை இது காட்டுகின்றது – என்றார்.

# விவசாயப் போதனாசிரியர் சிவதாஸ் மறைவு: இயற்கை விவசாயத்துறைக்குப் பேரிழப்பு

*(யாழ். நிருபர்)*



இயற்கை விவசாயத்தை உற்சாகத்துடனும் எளிமையாகவும் கற்றுக் கொடுக்கும் விவசாயப் போதனாசிரியர் சூரியகுமாரன் சிவதாஸ் (மாவடியூர்) நேற்று முன்தினம் (07) காலை வவுனியாவில் சிறுநீரக செயலிழப்பினால் காலமானார்.

யாழ். சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வவுனியா ஈச்சங்குளத்தை வதிவிடமாகவும் கொண்டவரான இவர்,தற்போது வவுனியா விவசாயத் திணைக்களத்தின் முருகனூர் பண்ணை முகாமையாளராக பணியாற்றி வந்திருந்தார்.

பல்வேறு நகைச்சுவைகளுடன் இயற்கை விவசாய தகவல்களை சுவாரஸ்யமான முறையில் கூறும் ஆற்றல் பெற்ற இவரின் இழப்பு உண்மையில் இயற்கை ஆர்வலர்களுக்கு, இயற்கை விவசாயிகளுக்கு பேரிழப்பாகும்.

ஏர்முனை என்கிற இயற்கை விவசாயம்சார் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து எளிமையான முறையில் விவசாயிகளுக்கும் புரியக்கூடிய இலகு தமிழில் பல்வேறு கட்டுரைகள், பதிவுகளை எழுதிவந்தார்.

இவரது சிந்தனையில் ஓவியக் கலைஞர் சங்கருடன் இணைந்து இவர் வெளிக்கொண்டுவந்த கருத்தோவியங்கள் விவசாயிகள், ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

மன்னாரின் பெரியமடுவில்தான் விவசாயப் போதனாசிரியராக இருந்த காலத்தில் பண்ணைப் பெண்கள் அமைப்பு சிறப்பாக இயங்க வழிகாட்டினார். இயற்கை வழி இயக்கத்தோடும் இணைந்து இயங்கியவர்.

# வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு யாழ். இந்துக் கல்லூரி வழங்கும் சந்தர்ப்பம்

*(யாழ். நிருபர்)*

உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கற்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இலவச விடுதி வசதிகளுடன் மேலதிக வகுப்புகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வன்னி பிரதேசம், கிழக்கு மாகாணம் மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் பின்தங்கிய உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்க ஆர்வமுள்ள மாணவர்கள் எமது பாடசாலையில் இணைந்து கல்வி கற்பதற்கானதொரு சந்தர்ப்பத்தினை யாழ். இந்துக் கல்லூரி ஏற்படுத்தித் தருகின்றது.

அவர்களுக்கான விடுதி வசதியினை இலவசமாக வழங்குவதுடன், பாடசாலை நேரத்திற்கு மேலதிகமான கற்பித்தல் நடவடிக்கையினையும் மேற்கொள்வதற்கு எமது ஆசிரியர்கள் தயாராகவுள்ளனர்.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு உயர்தர பிரிவிற்கு 30 மாணவர்களுக்கான அனுமதியினை வழங்கவுள்ளோம். எனவே, ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கவும் என பாடசாலை நிர்வாகம் கோரியுள்ளது.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
JAFFNA HINDU COLLEGE

2024 உயர்தர விஞ்ஞான பிரிவிற்கான அனுமதி

R. Senthilmaran
Principal
Jaffna Hindu College
Jaffna

# மட்டு. கிரான் பகுதியில் புகையிரதப் பாதையை ஊடறுத்துச் செல்லும் காணிகள் அபகரிப்பு

## சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புனானை, ஜெயந்தியாய மற்றும் ரிதிதென்ன ஆகிய பிரதேசங்களில் புகையிரதப் பாதையை ஊடறுத்துச் செல்லும் அரச காணிகளை அப்பிரதேசங்களைச் சேர்ந்தோர் சிலர் சட்டவிரோதமான முறையில் அபகரித்து வருவதாக பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து அப்பிரதேசங்களுக்கு திம்புலாகல ராகுலாங்கார நாகினி தேரர் நேற்றுக் காலை (08) திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்தார்.

புனானை பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் சிலருடன் தேரர் குறித்த இடங்களுக்குச் சென்று காணிகளில் கட்டடம் கட்டுவோர் மற்றும் சுற்றுவேலி இடுவோரிடம் விடயம் தொடர்பாக கேட்டறிந்துகொண்டார்.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளை கவனத்திற்கொண்டு அரசானது சிறுதானியப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சின் கீழ் புகையிரதப் பாதையை அண்மித்த நிலங்களை விவசாயத்தில் ஈடுபடச்செய்யும் முகமாக நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக அறிந்த மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்தோர் சிலர் காணிகளைப் பிடித்து தென்னை மரங்களை நாட்டியும், கற்களைக்கொண்டு கட்டடங்களை அமைத்தும் அரச கொள்கைக்கு எதிராகச் செயற்படுகின்றனர். அத்துடன், இப்பிரதேசங்களின் ஊடாகவே யானைகளின் போக்குவரத்து நடமாட்டங்கள் உள்ளன. இவர்களின் இவ்வாறான செயற்பாட்டினால் யானைகளின் வாழ்வியல் செயற்பாட்டிலும் பாதிப்பு ஏற்படும். எனவே, சட்டவிரோதமாக புகையிரதத் திணைக்களத்திற்குரிய காணிகளை அபகரிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்த வேண்டும். இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடி சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என தேரர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், வருகை தந்த பொதுமக்கள் சிலர், இக்காணி பங்கீடு தொடர்பில் பக்கச்சார்பில்லாமல் மூவின மக்களுக்கும் குறித்த காணியினை பங்கீடு செய்து வழங்குமாறு கேட்டுக்கொண்டனர். கடந்த ஒரு வார காலமாக புனானை தொடக்கம் ரிதிதென்னை வரையுமான சுமார் 10 கிலோ மீற்றர் தூரமுள்ள காணிகள் அபகரிக்கப்படும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றன. இதனால் சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் குழப்பமடைந்து காணப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட புகையிரதத் திணைக்களமும் மௌனம் காத்து வருகின்றது.

# வாழைச்சேனை வீடொன்றில் கொள்ளை; 40 பவுண் தங்க நகை – ரூ. 65 ஆயிரம் திருட்டு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள யூனியன் கொலனி பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் யன்னல், கதவை உடைத்து அங்கிருந்த 40 பவுண் தங்க ஆபரணங்கள் 65 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் நேற்று (8) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் தாயும் மகனும் இருந்துள்ள நிலையில், சம்பவதினமான நேற்று இரவு 12 மணிக்குப் பின்னர் ஆழ்ந்த நித்திரையில் இருந்துள்ளனர். காலையில் எழுந்திருந்தபோது வீட்டின் ஜன்னல் கிறிலை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் அங்கு பை ஒன்றில் வைத்திருந்த 40 தங்க ஆபரணங்கள் 65 ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# மட்டு. படுவான்கரை கிராமத்தினுள் புகுந்த காட்டுயானைகள் அட்டகாசம்




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட தும்பங்கேணி இளைஞர் விவசாயத்திட்டம் எனும் கிராமத்தில் நேற்று முன்தினம் (07) இரவு 8 மணியளவில் இரண்டு காட்டு யானைகள் புகுந்ததனால் அக்கிராமத்து மக்கள் மிகுந்த அல்லோலகல்லோலப் பட்டுள்ளார்கள்.

இதனால் தீப்பந்தம் ஏந்தியும், பட்டாசு கொளுத்தியும் யானைகளை விரட்டியுள்ளனர். எனினும், யானைகள் அங்கிருந்த தென்னை மரங்களையும் தள்ளி அழித்துவிட்டு ஒருவாறு நகர்ந்துள்ளன.

யானைகள் கிராமத்தைவிட்டு நகர்ந்துவிட்டதாக நினைத்து மக்கள் உறக்கத்திற்குச் சென்றுள்ளனர். ஆனாலும் கிராமத்தை விட்டுச்சென்ற யானைகள் நேற்று முன்தினம் (07) அதிகாலை 5 மணிக்கு மீண்டும் வந்துள்ளது. இதனால் மக்கள் மிகுந்த பீதியுடன், யானைகளை விரட்டியுள்ளனர்.

மிக அண்மைக்காலமாக அப்பகுதியில் காட்டுயானைகளின் தொல்லைகளும், அட்டகாசங்களும் அதிகரித்துள்ளன. எல்லைப்புறங்களைச் சுற்றி யானைப் பாதுகாப்பு வேலிகள் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றபோதிலும் அது இற்றைவரையில் கைகூடாத நிலையிலேயே அற்குள்ள மக்கள் வாழ்ந்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# திருமலையில் ஊடகர்களுக்கு அனர்த்த அபாய முகாமைத்துவ ஆளுமை விருத்தி செயலமர்வு




(அப்துல்சலாம் யாசீம்)

ஊடகவியலாளர்களுக்கான அனர்த்த அபாய முகாமைத்துவப் பொறிமுறை தொடர்பான ஆளுமை விருத்தி செயலமர்வு நேற்று (08) திருகோணமலையில் இடம்பெற்றது.

அனர்த்தத்தின்போது ஊடகவியலாளர் பொதுமக்களை தங்களது உயிர் உடமைகளை பாதுகாக்கும் நோக்கில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என இதன்போது தெளிவூட்டப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறை, வளிமண்டலவியல் திணைக்களத்தின் செயற்பாடுகளும் கடமைகளும், நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறிமுறை மற்றும் வெள்ள அனர்த்தத்தின்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கடமைகள், பொறுப்புகள் அனர்த்த அபாயத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.


இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பீ.எச்.என்.ஜயவிக்ரம அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி, விழிப்புணர்வூட்டல் பிரிவின் பணிப்பாளர் சுகத் திஸாநாயக்க, திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ். வேல்ட் விஷன் நிறுவனத்தின் முகாமையாளர் ஏ.ரவீந்திரன் வளிமண்டலவியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டுலாரி பெர்னாண்டோ என பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



கல்முனை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்தரிப்பு நிலையத்தில் இணையத்தள வாகனப் பதிவு உதவி முகாமையாளரால் ஆரம்பித்துவைக்கப்படுவதை படத்தில் காணலாம். sltb.eseht.lk எனும் இணையத்தளத்துடன் தொடர்புகொண்டு ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளலாம். (நற்பிட்டிமுனை நிருபர்)

## போடியார் புலம்பல்!



ஒருநாளைக்கு தேசிய அரசாங்கம் என்றுங்கா, மறுகா தேசிய சபை என்றுங்கா ஒன்றுமே விளங்குதில்லையே..?

ரெண்டையும் கலந்த சாம்பார் அரசாங்கமாக நடத்தி நரி மாமா காலத்த ஓட்டுவாறு. என்ன கோதாரி எண்டாலும் மொட்டு மோடையர்கள் உள்ளவரை எதுவுமே இரண்டரை வருசத்துக்கு சரிப்பட்டு வராது... இப்படியே காலத்த கடத்துவாங்க... கோட்டாவும் கொட்டாவி உடுறமாதரி ரணிலும் உடத்தான்போறாரு போல!

# கல்முனை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம்




(பெரியநீலாவணை நிருபர்)

கல்முனை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.றம்சீன் பக்கீர் தலைமையில் நேற்று (08) நடைபெற்றது.

156ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற இந்த மருத்துவப் பரிசோதனையின்போது பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களின் உடற்பரிசோதனை இங்கு முற்றிலும் இலவசமாக பரிசோதிக்கப்பட்டது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மியின் வழிகாட்டலுக்கமைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் இதில் கலந்துகொண்டு தேவையான அறிவுறுத்தல் களை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

கல்முனை பொலிஸ் நிலையத்தின் சமூக பாதுகாப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ.வாஹிட், சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எல்.றபீக் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# மறக்கமுடியாத சத்துருக்கொண்டான் படுகொலை

பா.அரியநேத்திரன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் சத்துருக்கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில் ஆகிய கிராமங்களில் வீடுகளில் தங்கியிருந்த பொதுமக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 9ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இவற்றில் 5 விசேட தேவையுடைய பிள்ளைகள், மேலும் 42 பத்து வயதிற்குட்பட்ட பிள்ளைகள். 85 பெண்கள், 28 முதியவர்கள் என பலதரப்பட்டவர்கள் ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டனர்.

சம்பவம் இடம்பெறும் முதல் நாள் அன்று இராணுவ முகாம்களிலிருந்து இராணுவ உளவாளிகள் நோட்டமிட்ட நிலையில், நன்கு திட்டமிட்டு அடுத்த நாள் அதாவது, 09.09.1990 ஞாயிற்றுக்கிழமை மாலைவேளையில், இராணுவ சீருடை அணிந்தவர்களும் சத்துருக்கொண்டான் முகாமுக்கு வருவார்கள். அங்கே உங்களுக்கு கூட்டம் ஒன்று இருக்கின்றது என்று கூறி அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஈழவிடுதலை வரலாறுகளை இப்போது இருக்கும் நாம் அடுத்த சந்ததிகளுக்கு எடுத்துக்கூறாமல் விடுவோமானால் அல்லது இத்தினங்களை அனுஷ்டிக்காமல் விடுவோமானால் எமது வரலாறு மறைப்பதற்கு தூண்டுகோலாய் அமையும்.

நடக்க முடியாதவர்களை இராணுவ லொறிகளில் ஏற்றிச்சென்று ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் என வேறு வேறாக பிரிக்கப்பட்டனர். சிங்கள இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையும் இணைந்தே இந்தக் கோரத் தாண்டவத்தை அரங்கேற்றியது.

இவற்றுக்கெல்லாம் தயாரான நிலையில் அன்று மாலை 7 மணியளவில் வாளால் வெட்டியும், கத்தியால் குத்தியும் துப்பாக்கியால் சுடப்பட்டும் அப்பாவி பொதுமக்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்டனர். இவ்வாறு கொலை செய்யப்பட்ட மக்கள் குழிகளில் தூக்கி வீசப்பட்டனர். அன்று மாலை 8 மணியளவில் பெரும் கூக்குரல் சத்தமும் சிறுவர்களின் மரண ஓலமும் எங்கும் எதிரொலித்த வண்ணம் காணப்பட்டது.

சத்துருக்கொண்டான் படுகொலையானது சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில் பகுதியில் தங்கியிருந்த 187 தமிழ் மக்கள் இலங்கை அரச படைகளாலும் அவர்களால் பயன்படுத்தப்பட்ட தமிழ் ஆயுதக் குழுவாலும் ஊர்காவல் படையாலும் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வாகும். இது தொடர்பாக இலங்கை அரசு இரு விசாரணைக் குழுக்களை அமைத்தும், எவரும் கைதுசெய்யப்படவில்லை. இச்சம்பவத்தை விசாரணை செய்த நீதிபதியின் அறிக்கைப்படி 27 வயதான மோகன சுந்தரி எனும் தாயும் அவரது 3 மாதக் குழந்தையும் படையினரால் "மண்ணா" கத்திகளால் சாகும்வரை குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அத்தோடு 5 கைக்குழந்தைகள், 42 பத்து வயதுக்குக் குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் இச்சம்பவத்தின் போது படுகொலை செய்யப்பட்டனர்.




இப்போது 32 வருடங்கள் கடந்தும் இந்தப் படுகொலைக்கு இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. கடந்த 30 வருடங்களில் ஐந்து தடவைகள் ஆட்சிகள் மாறி மாறி சிங்களத் தலைவர்கள் அலங்கரிக்கின்றனர். எந்த ஜனாதிபதியோ பிரதமரோ அரசாங்கமோ தமிழ் இனப்படுகொலைக்கான எந்த நீதியையும் பெற்றுத்தரவில்லை.

சர்வதேச நாடுகளும் இது தொடர்பாக எமக்கு நீதி நியாயங்களையோ அரசியல் தீர்வையோ பெற்றுத்தரவில்லை. ஏற்கனவே இருந்த அரசியல் யாப்புகளை மாற்றுவதற்கும் மாடுகளை வெட்டுவதற்கு தடைசெய்வதற்கும் காட்டும் அக்கறையை தமிழினப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்ற மனநிலை எந்த அரசாங்கங்களுக்கும் இருந்ததில்லை.

ஆனால், தமிழர்களாகிய நாம் எமக்கு ஏற்பட்ட இன்னல்கள், படுகொலைகள், அவலங்கள் என்பவற்றை மறக்காமல் அந்தந்த தினங்களில் எத்தனை வருடங்கள் கடந்தாலும் நினைவுகூரவேண்டியது எமது தார்மீகக் கடமையாகும். அவ்வாறு செய்வதன் ஊடாகவே எமது இளைய சந்ததியினர், இளைஞர்கள், மாணவர்கள் எமது வரலாற்றை அறிய ஏதுவாக இருக்கும்.

ஈழவிடுதலை வரலாறுகளை இப்போது இருக்கும் நாம் அடுத்த சந்ததிகளுக்கு எடுத்துக்கூறாமல் விடுவோமானால் அல்லது இத்தினங்களை அனுஷ்டிக்காமல் விடுவோமானால் எமது வரலாறு மறைப்பதற்கு தூண்டுகோலாய் அமையும் .

# மைதானத்தில் மோதிக்கொண்ட ஆப்கான் - பாக். ரசிகர்கள்




ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் அணி பாகிஸ்தானிடம் அதிர்ச்சி தோல்விகண்டது. தோல்வியடைந்த ஆப்கானிஸ்தான் அணி இறுதிப்போட்டிக்கு செல்லும் வாய்ப்பை இழந்தது.

இந்நிலையில், போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி தோல்வி அடைந்ததால் அந்த அணியின் ரசிகர்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்தனர். போட்டி நடந்த மைதானத்தில் இருந்த இருக்கைகளை வீசி எறிந்து தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். மேலும், போட்டியை காண வந்திருந்த பாகிஸ்தான் ரசிகர்கள் மீதும் ஆப்கானிஸ்தான் ரசிகர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலின்போது மைதானத்தில் இருந்த இருக்கைகளை ஒருவர் மீது ஒருவர் தூக்கி வீசினார். பின்னர் மைதானத்திலிருந்து வெளியே வந்த இருநாட்டு ரசிகர்களுக்கு இடையே வாக்குவாதமும் மோதலும் ஏற்பட்டன.

இதனால் சார்ஜா மைதானம் அருகே பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது. பின்னர் அங்கு வந்த பொலிஸார் இரு நாட்டு ரசிகர்களையும் சமாதானம் செய்து அனுப்பிவைத்தனர். போட்டியின்போது ஏற்பட்ட வெற்றி - தோல்வியால் இருநாட்டு ரசிகர்களும் மோதிக்கொண்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# இறுதி ஓவரில் ஹீரோவாக மாறிய நஷீம் ஷா

## ஆசியக்கிண்ண இறுதி ஆட்டத்திற்கு இலங்கை – பாகிஸ்தான் அணிகள் தகுதி




ஆப்கானிஸ்தானுக்கு எதிரான சுப்பர்-4 சுற்றின் முக்கியமான போட்டியில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

ஷார்ஜாவில் நடைபெற்ற பரபரப்பான இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி பந்து வீசுவதாக அறிவித்தது. அதன்படி முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுக்க இறுதியில் 6 விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்களைக் குவித்தது.

இதனையடுத்து 130 என்ற இலகுவான வெற்றியிலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான், கடைசி நேரத்தில் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது. இதனால் கடைசி ஓவரில் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கைவசம் ஒரு விக்கெட் மட்டுமே இருந்தது. இதனால் பாகிஸ்தானின் வெற்றி அவ்வளவு தான் எதிர்பார்த்த நிலையில், யாருமே எதிர்பாராத வகையில் ஃபருக்கி வீசிய கடைசி ஓவரின் முதல் 2 பந்துகளில் நஷீம் ஷா இரு சிக்சர்களை விளாசி வெற்றியை பெற்றுக்கொடுத்தார்.

பாகிஸ்தான் வீரர்கள் மைதானத்தில் துள்ளிக் குதித்து வெற்றியைக் கொண்டாடினர். இதன்மூலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதிப் போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடாத்துகின்றன.

# சதுரங்கத்தில் மீண்டும் சம்பியனானது கல்முனை சாஹிரா

(பொலிவேரியன் நிருபர்)

பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியின் சதுரங்கப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை 1ஆம் இடத்தைப் பெற்று மீண்டும் சம்பியனாகத் தெரிவாகி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளது.

இந்த மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியானது கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வருகின்றது. சுமார் 12 வருடங்களின் பின் கல்முனை சாஹிராக் கல்லூரியில் இடம்பெற்ற மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான சதுரங்கப் போட்டி அண்மையில் கல்லூரியின் காரியப்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் கல்முனை ஸாஹிராக் கல்லூரி 1ஆம் இடத்தைப் பெற்று சம்பியனாகவும், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டதோடு, தேசியமட்டத்திற்கும் தெரிவுசெய்யப்பட்டது.

மேலும் தனி திறமைக்கான தெரிவில் 20 வயதிற்குட்பட்ட பிரிவில் ஏ.எச்.எம்.ஏ.சிமாம், எம்.எச்.எம்.நுஸ்ரத் மற்றும் எம்.ஏ.ஏ.அத்தீப் ஆகிய மாணவர்களும், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் எம்.ஏ. தமீம், எம்.இஸட்.எம். சனீப் ஆகிய மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.



# பொலிஸ் தின சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வென்ற பொலிஸ் அணி



(எம்.என்.எம்.அப்ராஸ், யூ.கே.காலித்தீன்)

156ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை அணியை வீழ்த்தி பொலிஸ் அணி வெற்றியடைந்து கிண்ணத்தை சுவிகரித்தது.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் சாஹிரா தேசிய பாடசாலை அதிபர் எம்.ஐ. ஜாபீர் மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யூ.எல்.சம்சுடீன் ஆகியோர் தலைமையில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் மைதானத்தில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.டி. ராஜித ஸ்ரீ தமிந்த பிரதம அதிதியாகவும், அம்பாறை மாவட்ட பதில் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.ஏ.பி.ஹேரத் மற்றும் கல்முனை கல்வி வலய அதிகாரி சஹ்துல் நஜீம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக ஆகியோர் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய பொலிஸ் அணியினர் களத்தடுப்பை தெரிவுசெய்ய முதலில் ஆடிய சாஹிரா அணியினர் மட்டுப்படுத்தப்பட்ட 10 ஓவர்கள் முடிவில் 5 விக்கட்டுகளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலெடுத்தாடிய பொலிஸ் அணியினர் 8 ஓவர்கள் முடிவில் 1 விக்கெட்டை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டனர்.



டி.எம்.பி.டி. சேனாதீரே ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டதோடு, 26 பந்துகளுக்கு 46 ஓட்டங்களைப் பெற்ற எம்.எம்.ரஜீப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், டப்ளியூ.எம்.நாமல் குமாரே வனசிங்க சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## இன்றைய போட்டி




டுபாய் - இரவு 7.30

# மட்டக்களப்பு வாகரை வட்டுவான் ஆற்றில் இறந்து கரை ஒதுங்கும் மீன்கள் - நண்டுகள்

## நன்னீர் மீன்பிடி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வட்டுவான் ஆற்றில் கடந்த இரண்டு நாட்களாக மீன்கள், இறால்கள், நண்டுகள் உட்பட பல உயிரினங்கள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன. இந்த ஆற்றில் இறால் பண்ணையின் நச்சுத்தன்மைகொண்ட கழிவுநீர் கலந்ததால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கு நீதி வேண்டும் எனவும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.கருணேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த ஆற்றிலுள்ள மீன்கள், நண்டுகள் உட்பட பல நீர்வாழ் உயிரினங்கள் கடந்த செவ்வாய்கிழமை (06) தொடக்கம் இரண்டு தினங்களாக மர்மமான முறையில் திடீரென இறந்து கரையொதுங்கி வருகின்றன.

இந்தச் சம்பவத்திற்கு ஆற்றுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணைகளின் நச்சுத்தன்மை



கொண்ட கழிவுநீர் ஆற்றில் கலந்ததால் இந்த மீன்கள் இறந்திருக்க வாய்ப்புகள் அதிகமாக இருப்பதுடன், இந்த நாசகார செயலால் மீனவர்களின் மீன்பிடித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆற்றிலிருந்து இவ்வாறு ஒருபோதும் மீன்கள் இறந்து கரையொதுங்கியதில்லை. இருந்தபோதும் இது தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அந்த அதிகாரிகள் உயிரிழந்த மீன்களை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர். இந்த பிரதேச அதிகாரிகளின் பரிசோதனையில் எமக்கு நம்பிக்கையில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம்.

இப்பிரதேசத்தில் சுமார் 320 குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன், இவர்களில் 250 குடும்பங்கள் வாழ்வாதார தொழிலான நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்ற நிலையில், இவ்வாறு மீன் இனங்கள் உயிரிழந்து கரையொதுங்கியதால் அவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இதற்கு நீதிவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தந்தை செலுத்திய வேனில் சிக்குண்டு இரண்டு வயது மகள் பரிதாபமாக பலி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாயன்மார் திடல் பகுதியில் தந்தை செலுத்திய வேனுடன் மோதி இரண்டு வயது சிறுமி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (07) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ரஜீந்தன் நட்சத்திரா (02வயது) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. தந்தை வேனை பின்னால் எடுத்தபோது சிறுமி தடுக்கி விழுந்து வேனுக்குள் சிக்குண்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுமியின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பிலான விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்லடி பாமா - ருக்மணி சமேத கிருஷ்ண சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம்!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு பாமா - ருக்மணி சமேத ஸ்ரீ கிருஷ்ண சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் நேற்று (08) பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடை சூழ, வேதவிற்பன்னர்கள் வேதபாராயணங்கள் இசைக்க, மேள வாத்தியங்கள் முழங்க, வெகு சிறப்பாக நடந்தேறியது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகப் பூசைகள் இடம்பெற்று, ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லடி மாரியம்மன் ஆலயத்திலிருந்து பாற்குட பவனி இடம்பெற்று சங்காபிஷேகம் நிகழ்த்தப்படவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் யாவும் நயினை பிரதிஷ்டா பூஷணம் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களாலும், இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தானு மகாதேவ குருக்களாலும் உரிய விதிப்படி செய்யப்பட்டன.

இதேவேளை, நேற்று முன்தினம் (07) பாமா, ருக்மணி சமேத கிருஷ்ணருக்கும் மற்றும் பரிபார மூர்த்திகளான சனீஸ்வரர், ஆஞ்சநேயருக்கும் எண்ணெய்க் காப்பு சாத்தப்பட்டு, கிரியைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.


திகதி 07.09.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4871
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,741,810.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 4 4 6 3 9 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,730,199.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3113
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,357,420.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 04 06 69 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 74,786,065.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1326
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,710,240.00
வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 1 2 4 4 3 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,475,020.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 901
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,308,140.00
வெற்றி இலக்கினம் U வெற்றி இலக்கங்கள் 05 54 69 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,568,931.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 180
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,506,020.00
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 36 41 47 57
விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,557,631.20

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1219
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,627,120.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 269,305,310.00
D 18 07 17 26 34
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475
Email: info@nlb.lk Web: www.nlb.lk



# ஏழைகளை வாட்டி வதைக்கும் பொருளாதார தாக்கம்!

**சத்தார் எம். ஜாவித்**

இந்த நூற்றாண்டில் இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார வீழ்ச்சிபோன்று முன்னைய காலத்தில் ஏற்படவில்லை எனலாம். இந்த நிலையிலிருந்து இலங்கையைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்த நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியிலேயே சென்றுகொண்டிருக்கின்றன எனலாம்.

கடந்த இரண்டு வருட காலமாக மனித உயிர்களைக் காவுகொண்டுவந்த கொரோனா எனும் நோய், உலக நாடுகளை முற்றாகவே முடக்கத்திற்கு உட்படுத்தியதெனலாம். குறிப்பாக, பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களை நாளாந்தம் அடுக்கடுக்காக காவுகொண்டு மக்களை அச்ச நிலைமைக்கு உள்ளாக்கியிருந்தது கொரோனா நோய்.

ஒவ்வொரு நாடும் கொரோனா நோயை கட்டுப்படுத்த வேண்டியது முக்கிய செயற்பாடாகவே இருந்தது. குறிப்பாக, மக்கள் ஒன்றுகூடுவது, பொது இடங்களில் மக்கள் நடமாடுவது போன்ற செயற்பாடுகளை கட்டுப்படுத்தி சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்தால் மட்டுமே கொரோனா நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கலாம் என்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் வேண்டுகோளின்பேரில் சகல நாடுகளிலும் மக்கள் வீடுகளுக்குள் இருக்கவேண்டும் என்ற அறிவுறுத்தல்களுக்கமைய நாட்டை முடக்கி வைக்கவேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது.

இவ்வாறான முடக்க நிலைமை காரணமாக மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானதுடன், பொருளாதார ரீதியாக பல நாடுகளும் செயலிழந்து பாதிப்புக்குள்ளாகின. அதிகமான மக்களுக்கு முடக்க நிலைமை காரணமாக உணவு, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் பூரணமாக பெற்றுக்கொள்ள முடியாது பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டதுடன், இந்த முடக்க நிலைமை காரணமாக சகல பொருட்களினதும் விலைகள்கூட ஒன்றுக்குப் பல மடங்கு அதிகரிக்கப்பட்டு மக்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒருவகையான கஷ்ட நிலைமைக்கு உள்ளாகியிருந்தனர்.

இவ்வாறான நிலையில் உலக நாடுகளைப்போல் இலங்கையும் பல வகையான இடர்களை எதிர்கொண்டதுடன், மக்களும் ஊரடங்குச் சட்டம், முடக்க நிலைமை காரணமாக சொல்லொணாத் துன்பங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகள் ஏற்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு நிலையிலிருந்து சிறிது விடுபட்டாலும் கொரோனா நோயைக் கட்டுப்படுத்த வேண்டிய சுகாதார நடைமுறைகள் பூரணமாக தளர்த்தப்படாத நிலையிலும் மக்கள் சிறிது விடுபட்டாலும் கஷ்ட நிலைமைகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. இவ்வாறான நிலையில், இலங்கை மக்களுக்கு சுனாமிபோன்று மற்றுமொரு இடி மக்கள் மீது விழுந்துள்ளது. அதுதான் பொருளாதாரப் பிரச்சினையாகும். இன்றுவரை அது மக்களை பட்டினியின் விளிம்புக்கு கொண்டுவந்துவிட்டது எனலாம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் இலங்கையில் டொலர் இல்லாமை என்ற காரணத்தினால் பல பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட ஆரம்பித்துவிட்டது. இந்த டொலர் பிரச்சினை காரணமாக இறக்குமதிகள் குறைவடையத் தொடங்கியதுடன், பல இறக்குமதியாளர்கள் தமது இறக்குதி செயற்பாடுகளிலிருந்து சிறுகச்சிறுக விலகியதன் பிரதிபலன் பொருட் தட்டுப்பாடு மற்றும் பொருட்களின் விலைகளும் நாளுக்கு நாள் விஷம்போல் ஏறத் தொடங்கிவிட்டன. குறிப்பாக இறக்குமதி புறக்கணிப்பு அத்தியாவசியப் பொருட்களையும் அதிகளவில் விலை அதிகரிப்புக்கு வழிசமைத்துவிட்டது.

நாளுக்குநாள் பொருட் தட்டுப்பாடும் விலைகள் அதிகரிப்பும் ஏற்பட்டு நாட்டில் மக்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு எந்த நேரத்திலும் நீண்ட வரிசைகளில் காத்திருந்து பொருட்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெறும் நிலை ஏற்பட்டுவிட்டது.

குறிப்பாக, பெற்றோல், டீசல், எரிவாயு போன்றவற்றிற்கு நாட்கணக்கில் பெற்றோல் செட்களிலும் எரிவாயு கடைகளுக்கு முன்னாலும் இரவு, பகலாக மழையிலும், வெயிலிலும் காத்திருந்து பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்தனர். அத்துடன், சிறுவர்களுக்கான பால்மா தட்டுப்பாடும் சிறார்கள் விடயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பால்மா இல்லாது குழந்தைகள் நாளாந்தம் அழு குரல்களுடனேயே காணப்பட்டனர்.

இவ்வாறான சூழ்நிலை மேலும் வலுவடைந்து இன்று பொருட்களின் விலைகள் வகைதொகையின்றி வியாபாரிகளும், வர்த்தக கம்பனிகளும் தாம் நினைத்த மாதிரி விலைகளை அதிகரித்து அநியாய விலைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை, பொருட்களின் விலை அதிகரிப்புகள், அரசியல் ஸ்திரமற்ற தன்மைகள் நாட்டில் பாரிய ஆர்ப்பாட்டங்களுக்கு வித்திட்டு ஓர் ஆட்சி மாற்றத்திற்கு வழிசமைத்தது என்றாலும் அது மக்கள் விரும்பிய வகையில் அமையாது அரசியல்வாதிகளின் விருப்பத்திற்கு அமைவாக ஏற்படுத்தப்பட்ட ஓர் அரசாங்கமே தற்போது காணப்படுகின்றதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் எழுச்சிப் போராட்டம் காரணமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியைத் துறந்து நாட்டை விட்டு ஓடுவதற்கு வழிசமைத்தது எனலாம். இத்தருணத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி பின்னர் ஜனாதிபதியானார். இந்தப் பின்னணியில் இன்றுவரை அரசியல் ஸ்திரமற்ற தன்மையே இலங்கை அரசியலில் காணப்படுவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்து வருகின்றன.

இந்த அரசாங்கத்தின் காலத்தில் எரிபொருள், எரிவாயு, அத்தியாவசியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் என அனைத்து பொருட்களினதும் விலைகள் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதளவுக்கு அதிகரிப்புகள் ஏற்பட்டு நிலைமைகள் மோசமாகியுள்ளன. அத்துடன், பல நூற்றுக்கணக்கான பொருட்களுக்கு அரசாங்கம் இறக்குமதி தடைக் கட்டுப்பாடுகளை கொண்டுவந்தமை மேலும் மக்களின் வாழ்வாதாரத்தில் பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதைபோல் ஆகிவிட்டது.

இந்த நிலைமைகள் இலங்கையின் நடுத்தர மற்றும் வறுமைக்கோட்டிற்குள் அன்றாடம் கூலித் தொழில் செய்து சிறிய வருமானத்துடன், உழைத்து வாழும் மக்களை பாரியளவில் பாதித்துள்ளது. கோதுமை மா, சீனி, அரிசி, எரிபொருள் என்பனவற்றின் விலை அதிகரிப்பு குறித்த மக்களின் வாழ்வியலை அதிகளவில் பாதித்து அதிகமான மக்கள் ஒருநேர உணவைக்கூட சரியான முறையில் பெற்றுக்கொள்ள முடியாதளவு பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர்.

இவர்களுக்கு எந்தவொரு நிவாரணமும் கிடைக்காத நிலையில், ஏனையவர்களின் கைகளை எதிர்பார்க்கும் நிலைமைகளுக்கு இட்டுச்சென்றுள்ளது. இலங்கை பல நாடுகளிலும் கடன்களையும், பொருள் உதவிகளையும் கோரியபோதிலும் அவை எதிர்பார்த்தளவு கிடைக்கவில்லை. குறிப்பாக, இந்திய அரசாங்கம் இரண்டு, மூன்று தடவைகள் இலங்கை மக்களின் நலன்களில் அக்கறைகொண்டு உணவுப் பொருட்களையும் ஏனைய சில உதவிகளையும் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முன்னைய கடன்களை மீளச் செலுத்தவில்லை என்ற காரணத்தினாலும், ஸ்திரமான ஒரு அரசாங்கம் காணப்படவில்லை என்ற போர்வையில் உதவிகளை வழங்குவதில் பின்னிற்கின்றமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

இருந்தாலும் இலங்கை உதவி கோரும் விடயத்தில் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்தியா, சீனா, வளைகுடாவிலுள்ள இஸ்லாமிய நாடுகள், அமெரிக்கா என பலதரப்பட்ட நாடுகளிலும் உதவிகளை நாடி நிற்கின்றது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தற்போது ஐ.எம்.எவ். மூலம் 2.9 பில்லியன் டொலர் கடன் உதவியை பெறுவதற்கு அரசாங்கத்திற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கடன் உதவி கிடைக்கும் என்ற ஓரளவாவது நிம்மதிப் பெருமூச்சில் இலங்கை தற்போது காணப்படுகின்றது.

என்றாலும் வளர்முக நாடு என்றவகையில் இலங்கைவாழ் மக்களில் அதிகமானவர்கள் வறுமைக்கோட்டிற்குள்ளேயே வாழ்ந்து வருகின்றனர். அடிப்படை வருமானம் குறைந்த மக்களில் அதிகமானவர்கள் தற்போதைய விலைவாசி காரணமாக தமது குடும்பத்தை கொண்டுசெல்ல முடியாது பட்டினியில் இருக்கின்றனர். ஏதோ ஒருவகையில் கிடைக்கும் உணவை அவர்கள் ஒருநேர உணவாக உட்கொண்டுவிட்டு வாழும் ஒரு துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

குழந்தைகள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் நோயாளிகள் ஊட்டச்சத்துள்ள உணவின்றி சோர்வு நிலைமைகளுக்குள்ளாகி வருகின்றனர். அதிகமான சிறார்களும், வயோதிபர்களும் பல நோய்களுக்குள்ளாகி இருப்பதுடன், அவற்றைக் குணப்படுத்த போதியளவு மருந்துப் பொருட்களும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

அரசாங்கம் தற்போதைய இந்த இக்கட்டான நிலையில் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் உடனடி நிவாரண வசதிகளை வழங்கி அவர்களின் பட்டினிச்சாவை குறைப்பதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக, அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் தமது கட்சிப் பேதங்கள், ஏற்றத்தாழ்வுகளை மறந்து மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை அவசரமாக இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான ஒரு செயற்றிட்டத்தை ஆரம்பித்து மக்களின் நலன்களில் அக்கறைகொள்ளுமாறு மக்கள் நலன்விரும்பிகள் வேண்டி நிற்கின்றனர்.

# ஆத்மீகத் துறைக்கு அளப்பரிய பங்காற்றிய பெருந்தகை



## செய்குனா அப்பா (ரஹ்)

**பேருவளை பீ.எம்.முக்தார்**

தென்னிந்தியா, முத்துப்பேட்டையைச் சேர்ந்த ஆத்மீக ஞானி மர்ஹூம் மௌலானா மௌலவி அல்ஹாஜ் அஹம்மது லெப்பை ஆலிம் (ரஹ்) அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்த கத்தமுல் குர்ஆன் தமாம் மஜ்லிஸ் பேருவளை சீனன்கோட்டை பிட்டவளை சாதுலியா ஸாவியாவில் எதிர்வரும் 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை கலீபத்துஸ் ஸாதுலி மௌலவி எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இலங்கையிலும் இந்தியாவிலும் புகழ்பூத்த ஆன்மீகப் பெரியாராக விளங்கிய மௌலானா மௌலவி அல்ஹாஜ் அஹம்மது லெப்பை ஆலிம் இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபத்துல் குலபாவாகவும் அதேநேரம் நக்ஷபந்தியா, ரிஃபாயிய்யா தரீக்காக்களின் கலீபாவாகவும் திகழ்ந்து ஆத்மீகத்துறையில் அளப்பரிய பணியாற்றியுள்ளார். செய்குனா அப்பா என சிறப்பாக அழைக்கப்படும் இவர், இந்தியாவின் முத்துப்பேட்டையில் கி.பி. 1856இல் பிறந்துள்ளார்கள்.

சிறு வயதுமுதல் இவருக்கிருந்த ஆன்மீகத்துறை ஆர்வம் காரணமாக கேரள மாநிலத்திற்குச் சென்று அங்குள்ள உலமாப் பெருந்தகைகளிடம் சன்மார்க்கக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தார்.

தொடர்ந்தும் கல்வி பெறும் ஆவலில் மக்கா நகருக்குச் சென்று அங்குள்ள மத்ரஸத்துல் சவ்லத்தியத்தில் சுமார் பத்தாண்டுகள் தங்கியிருந்து சன்மார்க்கத் துறையில் ஆழமான அறிவைப் பெற்றுக்கொண்டார். பின்னர், மதீனா முனவ்வராவிலும் மேலும் உயர் கல்வியைப் பெற்றுத் தேறினார்.

மக்காவில் முப்தி அஷ்ஷெய்யித் இப்னு ஜைனி தஹ்லான் (ரஹ்), ஷெய்குல் இஸ்லாம் முஹம்மது அப்துல் காதிர் அல்யமனீ உள்ளிட்ட இறை நேசப் பெரியார்கள் பலரிடம் சன்மார்க்கக் கல்வியைப் பெறும், பெரும்பேற்றினையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

பின்னர் மக்கா மதரஸாவில் சிறிதுகாலம் உஸ்தாத்தாகவும் பணியாற்றியுள்ளார். இந்நிலையில், மத்ரஸாவின் பெரியார்களது நல்லாசிகளைப் பெற்று, மக்காவிலேயே திருமணமும் செய்துகொண்டார்.

இதனைப் பெற்றோருக்கும் தெரிவித்தார்ள். ஆனாலும் தன் மகனை நிரந்தரமாக விட்டுப் பிரிந்திருக்க மனமின்றி தாயார், எப்படியும் தன் மகனை வரவழைக்க பல வழிகளிலும் முயற்சியில் ஈடுபட்டார். அவற்றுள் ஒன்றாக தனக்கு நன்கு அறிமுகமான இலங்கை தர்கா நகரிலிருந்து ஹஜ் கடமை செல்லும் பாவா ஆலிம் சாஹிப், செய்குனா இஸ்மாயில் ஹாஜியார் ஆகியோருக்கு உருக்கமான கடிதம் அனுப்பி எப்படியாவது மகனை அழைத்து வரும்படி கேட்டுள்ளார்.

செய்குனா இஸ்மாயில் ஹாஜி, மக்காவில் குறிப்பிட்ட செய்குனாவைக் கண்டுபிடித்தார்கள். அவரது உஸ்தாத் அல்லமா அஷ்ஷெய்யித் ஜெய்னீ தஹ்லான் அவர்களிடம் தாயாரின் கடிதத்தை மொழிபெயர்ப்பு செய்து கொடுத்து நிலைமையைத் தெளிவுபடுத்தினார். அதன் விளைவாக மகனை அழைத்து வருவதில் வெற்றி கண்டார். அதுவும் உஸ்த்தாதின் அறிவுரைப்படி நஷ்டஈடு கொடுத்து மக்கத்து மனைவியை விவாகரத்துச் செய்த பின்னர் நாடு திரும்பினார். பெற்றோரின் விருப்பத்தின் பேரில் அதிராம்பட்டிணத்தைச் சேர்ந்த முஹம்மது மரியம் என்ற பெண்ணை மணந்தார். இத்தம்பதிக்கு 7 ஆண்களும் 3 பெண்களுமாக பத்துப் பிள்ளைகள் பிறந்தார்கள். மர்யம் மரணித்ததன் பின்னர் முஹம்மது சாரா என்ற பெண்ணை மணந்து இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் தந்தையானார். குடும்பச் செலவை சீராக நடத்துவதற்காக இலங்கை வந்து மாணிக்கம் மற்றும் அரிசி வியாபாரத்தில் ஈடுபட்டார்.

மக்காவில் கற்கும் காலத்தில் நட்புகொண்ட இலங்கை சீனன்கோட்டை மாணிக்க வர்த்தகரான நெய்னா மரிக்கார் அப்துல் காதிர் ஹாஜியார் மூலமாக இலங்கை வந்து மற்றொரு பெரிய மாணிக்க வியாபாரியான ஹஜ்ஜூ மரைக்கார் உமர் லெப்பையின் வீட்டில் செய்குனா தங்கியிருந்து வர்த்தகத்தைச் செய்து வந்தார். இச்சந்தர்ப்பத்தில் சீனன்கோட்டை குட்டிமலை பள்ளிவாசலில் 40 தினங்கள் கல்வத் எனும் இறை தியானத்தில் ஈடுபட்டார். பஞ்சு மரிக்கார் ஹஜ்ஜூ மரிக்காரின் வபாத்தின் பின்னர், செய்குனா அவர்கள் சீ.எம்.எச்.சாலிஹ் ஹாஜியார் மற்றும் தர்கா நகரைச் சேர்ந்த செய்கு இஸ்மாயில் ஹாஜியார் ஆகியோரின் வீடுகளில் தங்கியிருந்தார். இறுதிக்காலத்தில் கொழும்பு மாக்கான் மரிக்கார் அவர்களது இல்லத்திலும் தங்கியிருந்துள்ளார். அக்காலத்தில் சென்னை ஜமாலியா அரபிக் கல்லூரி அதிபர் மௌலானா முஹம்மது மதார் ஆலிம் சாஹிப் மற்றும் அங்கு ஆசிரியராகவுள்ள மௌலானா முஹியத்தீன் ஆலிம் சாஹிப் ஆகியோர் செய்குனாவின் மாணவர்களாவார்கள். அதனால் அவர்கள் மூலமாக செய்குனாவின் மேதைத்தன்மையை அங்குள்ள கொடைவள்ளல் ஜமால் முஹிய்யித்தீன் சாஹிப் அறிந்து, செய்குனாவை சென்னைக்கு அழைத்து அவருடன் முத்து வர்த்தகத்தில் ஈடுபட்டார்.

அத்துடன், ஜமாலியாவிலும் செய்குனா விரிவுரையாளராகவும் பணியாற்றினார். பின்னர் அதிராம்பட்டினம் வந்து, தனது வீட்டுத் திண்ணையில் அல்மத்ரஸத்துர் ரஹ்மானியா என்ற பெயரில் மத்ரஸா ஒன்றை நிறுவினார். அங்குள்ள தனவந்தர்களில் ஒருவரான மீ.மு.முஹியத்தீன் அப்துல் காதிர் மரைக்காயர் அங்கும் இலங்கையிலும் மத்ரஸாவின் செயற்பாட்டிற்காக சொத்துகள் பல வாங்கி வக்பு செய்தார். அம்மத்ரஸாவில் செய்குனாவிடம் நட்சத்திரக் கணித பாடத்தைக் கற்பதற்கு வெளிநாடுகளில் இருந்தும் பலர் ஆர்வத்தோடு வந்து கற்றுள்ளனர். மக்காவில் ஷாதுலிய்யா தரீக்காவின் பெரியாராக விளங்கிய ஹலரத் அஷ்ஷெய்கு முஹம்மது இப்ராஹிம் மக்கி (ரஹ்) அவர்கள் அதிராம்பட்டினத்திற்கு வந்து செய்குனாவை கலீபத்துல் குலபாவாக நியமித்தார்கள். அதே காலப் பிரிவில் செய்குனா அவர்கள் நக்ஷபந்தியா, ரிஃபாயிய்யா ஆகிய தரீக்காக்களின் கலீபாவாகவும் விளங்கினார்கள். ஷாதுலிய்யா கலீபத்துல் குலபாவாக சுமார் 40 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்கள்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஷாதுலிய்யா தரீக்காவை வளர்ப்பதற்காக பல ஊர்களுக்கும் சென்று தம் கடமையைச் சிறப்பாக செய்துள்ளார்கள். சீனன்கோட்டை பிட்டவளயில் 1935ஆம் ஆண்டு "அல்மிர் அதுஷ் ஷாதுலிய்யா ஸாவியாவை" நிறுவியதோடு தர்கா நகர் ஸாவிய்யத்துல் இப்ராஹிமிய்யாவிலும் தங்கியிருந்து தரீக்கா நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டியுள்ளார்கள்.



இவரது காலம் ஷாதுலிய்யா தரீக்காவின் பொற்காலமாகவே விளங்கியது.

அதிராம்பட்டினத்திலும் பிட்டவள ஸாவியாவிலும் புனித புகாரி ஷரீப் பாராயணம் செய்யும் வைபவத்தை துவக்கி வைத்தார்கள். இம் மஜ்லீஸ் இங்கு 87 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. மாளிகாஹேன புகாரி தக்கீயாவின் புகாரி மஜ்லிஸிலும் கலந்து சிறப்பித்துள்ளார். சென்னை சட்டமன்ற மார்க்க சீர்திருத்தக் குழுவிலும் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அங்குள்ள மஜ்லிஸுல் உலமாவின் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்கள். இலங்கையிலும் இந்தியாவிலும் புதிதாக அமைக்கப்படும் பள்ளிவாசல்களுக்கு கிப்லாவை நிர்ணயிக்கும் பணியும் அன்று இவராலேயே நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஹஜ் கடமை குறித்தும் ஹாஜிகளுக்குத் தேவையான அரபு பேச்சு வழக்கு குறித்து தேவையான சொற்றொடர்கள் அடங்கிய அரபுத் தமிழ் கிதாபுல் ஹஜ் எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார்கள். மார்க்க ஞான ஒளிபரப்பிய செய்குனா அவர்களின் அந்திம காலத்தின் பெரும்பகுதி இலங்கையிலேயே கழிந்துள்ளது.

அன்று கொழும்பு உம்மு ஸாவியாவில் நோன்புப் பெருநாள் தொழுகையை செய்குனா அவர்கள் தொழுது, முதல் ஸலாம் கொடுத்தவுடன் மயங்கிக் கீழே சாய்ந்துள்ளார்கள். உடனே மக்கள் அவரைத் தூக்கி கொழும்பு மாக்கான் மரிக்காரின் இல்லத்தில் சேர்த்துள்ளனர். அங்கு சிலநாட்கள் சிகிச்சைக்குப் பின்னர் ஓரளவு உடல் தேறியுள்ளார்கள். பின்னர் தன் சொந்த ஊரான அதிராம்பட்டினத்திற்குச் சென்றார்கள். அங்கு கி.பி. 1945 ஜனவரி 29ஆம் திகதி இவ்வுலகை விட்டும் பிரிந்தார்கள். அன்னாரின் அடக்கஸ்தலம் அதிரை மரைக்கா பள்ளி வளவில் அமைந்துள்ளது.

# அரச அடக்குமுறையை எதிர்த்து போராட்டக்காரர்கள் மீண்டும் வீதிக்கு





அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சோஷலிச இளைஞர் சங்கம் மற்றும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் கொழும்பில் நேற்று முன்தினம் (07) சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

"அடக்குமுறைக்கு எதிரான கறுப்பு மணித்தியாலம்" என்ற தொனிப்பொருளில் பத்தரமுல்லை பொலிதுவ சந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கறுப்பு நிற ஆடை அணிந்து கலந்து கொண்டிருந்தனர். அடக்குமுறையை நிறுத்து, மக்களுக்கு நிவாரணம் வேண்டும்,

அரசாங்கத்தை ஆட்சி பீடத்திலிருந்து நீக்கு ஆகிய கோரிக்கைகளை உள்ளிடக்கிய பதாகைகளை காட்சிப்படுத்தி சிலர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் காரணமாக பொல்துவையை அண்மித்த வீதிகளில் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்பட்டது.

இந்த சத்தியாக் கிரகப் போராட்டத்தில் நடிகை தமிதா அபேரத்ன, சோஷலிச இளைஞர் சங்கத்தைச் சேரந்த எரங்க குணசேகர, லஹிரு வீரசேகர ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின்கீழ் ஒக்டோபர் முதல் விசேட கொடுப்பனவு

## தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுசார் ஆலோசனைக்குழுவில் அமைச்சர் மனுஷ தெரிவிப்பு





சகல பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும், நகரங்களிலுள்ள தோட்ட சமூகத்தினருக்கும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம்முதல் உலக உணவுத் திட்டத்தின்கீழ் விசேட கொடுப்பனவு வழங்கப்படவிருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயகார நேற்று முன்தினம் (07) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய கூட்டத்தொடரின் தொழில் மற்றும் வெளிநாட்டு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்டே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நகரப்புறங்களிலுள்ள தோட்ட சமூகத் தினருக்கு இதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்பொழுது காணப்படும் நெருக்கடிக்கு மத்தியில் ஜப்பான், கொரியா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு அதிக தொழிலாளர்களை அனுப்புவதை ஒழுங்குமுறைப்படுத்த தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று ஜப்பான் போன்ற நாடுகளுக்குத் தொழிலாளர்களை அனுப்புவதாகத் தெரிவித்து வகுப்புகளை நடத்தும் மோசடிக்காரர்கள் இருப்பதால் பொதுமக்கள் சரியானதைத் தேடிப் பெற்றுக்கொண்டு செயற்படவேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் இங்கு கலந்துரையாடப் பட்டது.

கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டமூலம் இரண்டு மற்றும் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் என்பனவும் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டதுடன், அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரட்ன, வடிவேல் சுரேஷ், டி.பிஹேரத், வேலுகுமார், அரவிந்தகுமார் உள்ளிட்டவர்களும், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

# பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் எம்.பிக்களை தெளிவுபடுத்தும் தொடர் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிக்குக!

## அரசாங்க நிதி பற்றிய குழுவில் முன்மொழிவு





நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியின் பாரதூரமான நிலைமை தொடர்பில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தெளிவுபடுத்த அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைமையின்கீழ் தொடர் நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படவேண்டும் என குழுவின் உறுப்பினர்களால் முன்மொழியப் பட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ த சில்வா தலைமையில் நேற்று (06) கூடியபோதே இவ்வாறு முன்மொழியப்பட்டது.

இதில் கடந்த ஜூலை 27ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட "2022ஆம் ஆண்டின் அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை" தொடர்பில் நிதி அமைச்சு, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்ட அதிகாரிகளால் முன்வைப்புகளுடன் அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த முன்வைப்புகளின்போது தெளிவுபடுத்தப்பட்ட பல்வேறு விடயங்கள் காரணமாக இவ்வாறு நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

பணவீக்கம் அதிகரித்தமையால் கடன்களுக்கான வட்டிவீதமும் அதிகரிக்கலாம் என இக்குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ த சில்வா தெரிவித்தார். இதனால் பணவீக்கத்துக்கும் வட்டி வீதத்துக்கும் இடையில் காணப்படும் தொடர்பு குறித்து சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சி முதலாவதாக நடத்தப்பட வேண்டும் என அவர் பரிந்துரைத்தார்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்துகொள்வதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் 2019ஆம் ஆண்டு இறுதிக் காலாண்டில் வரி சதவீதம் குறைக்கப்பட்டமையால் அரசாங்கத்தின் வருமானம் குறைந்தமை தொடர்பிலும் இங்கு நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. அரசாங்கத்தின் வருமானம் குறைவதற்கு கொவிட் தொற்றுநோய் ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2022ஆம் ஆண்டு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில், அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, எம்.ஏ.சுமந்திரன், துமிந்த திஸாநாயக்க, வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல, பிரமித்த பண்டார தென்னகோன், ஹர்ஷன ராஜகருணா, அனுப பஸ்குவல், மயந்த திஸாநாயக்க மற்றும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தம்புள்ளை களஞ்சியத்திலிருந்து 200 நெல் மூடைகள் திருட்டு



தம்புள்ளை, கந்தளமே நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான களஞ்சியத்திலிருந்து 200இற்கும் அதிகமான நெல் மூடைகள் திருடப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தம்புள்ளை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

தம்புள்ளை, கந்தளமே நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஒரு களஞ்சியத்தின் தகரங்களை நீக்கி இந்த நெல் மூடைகள் திருடப்பட்டுச் செல்லப்பட்டுள்ளதாக அவ்விடத்தில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாவலர் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு அறிவித்தன் பின்னர் இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, இந்த நெல் தொகையை திருடிச் சென்ற குழுவினர் தொடபிலும் வாகனம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாவலர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவம் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்றதாகவும் இதுவரையில் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களை கைதுசெய்து, எவ்வளவு நெற்தொகை திருடப்பட்டுள்ளது என்பது குறித்து சரியாக கணிப்பிடப்படவில்லை என்றும் 200 நெல் மூடைகள் திருடப்பட்டிருக்கலாம் என நம்புவதாகவும் குறித்த பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

# உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த வேள்விப் பொங்கல்







(உடப்பு செய்தியாளர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க உடப்பு கடற்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கும்பம் ஏற்றும் நிகழ்வு நேற்று முன்தினம் (7) இரவு 7மணிக்கு இடம்பெற்றது.

கும்பம் ஏற்றியதைத் தொடர்ந்து பத்து நாட்கள் அம்பாள் வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளி, சுவாமி உள்வீதி வலம் வந்து விசேட பூஜைகள் இடம்பெற்றன.

இங்கு முக்கியமாக அருகிலுள்ள கடற்கரைப் பகுதியில் மூன்று ஊற்றுகள் தோண்டப்பட்டு அதிலிருந்து நீர் பெறப்பட்டு பத்து நாட்களும் கடல்நீரில் விளக்கு எரிக்கப்படும்.

அத்துடன், கும்பத்தில் இருக்கும் வேப்பிலை பூத்துக் காய்ப்பதும் முக்கிய நிகழ்வாக காணப்படுகிறது. இது வரலாற்று ரீதியாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் குழந்தைப்பேறு இல்லாத பெண்கள் இவ்வாலயத்தில் குழந்தை கிடைக்க வேண்டும் என்று வேண்டி இக்காலத்தில் ஆலயத்தில் "காயம்" எனப்படும் மூலிகைகள் பொருள் வழங்கப்படும்.

அதனை பக்திபூர்வமாக விரதம் இருந்து உட்கொள்வார்கள். இதனால் பல பேருக்கு குழந்தைச் செல்வம் கிடைத்ததுண்டு. அத்துடன், முக்கியமாக 15ஆம் திகதி அக்கினிச்சட்டி ஏந்திய ஊர்வலம், பிச்சைக்கரகம் இடம்பெறுவதோடு, 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேள்விப் பொங்கல் இடம்பெற்று இனிதே நிறைவடையும்.

# நடிகை தமிதா கைது

திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நாடக நடிகை தமிதா அபேரத்ன நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதாக கொழும்பு வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி காரியாலயத்துக்குள் பலவந்தமாக நுழைந்தமை தொடர்பில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பத்தரமுல்லை, பொல்துவ சந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பின்னர் அவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இவர் நேற்று (08) கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# பொலிஸ் வாரத்தை முன்னிட்டு கோப்பாயில் மரதன் ஓட்டப்போட்டி



156ஆவது பொலிஸ் வீரர்கள் தினத்தை முன்னிட்டு பொலிஸ் திணைக்களத்தினால் இம்மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை நாடுபூராகவும் பொலிஸ் வாரம் அனுஷ்டிக்கப்படுவதோடு ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் சமூகமட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய, பொலிஸ் வாரத்தை முன்னிட்டு கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸாரினால் மரதன் ஓட்டப்போட்டி முன்னெடுக்கப்பட்டது

நேற்று (08) காலை கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமான மருதன் ஓட்டப் போட்டி கல்வியங்காட்டு சந்தி ஊடாக பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியை வந்தடைந்து அவ்வழியே கோப்பாய் சந்தியினூடாக மீண்டும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சென்றடைந்தது.

அமைதியான முறையில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாதவாறு இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்குபற்றியதோடு மருதன் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

# "நாடாளுமன்ற சார சங்ஹிதா" புலமை இலக்கிய நூலின் பிரதி இணையத்தளத்தில்

நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் "நாடாளுமன்ற சார சங்ஹிதா" புலமை இலக்கிய நூலின் இலத்திரனியல் பிரதி நாடாளுமன்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

https://www.parliament.lk/ta/secretariat/academic-journal எனும் இணைப்பின் ஊடாக "நாடாளுமன்ற சார சங்ஹிதா" புலமை இலக்கிய நூலின் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுப்பை பார்வையிட முடியும்.

சட்டவாக்க செயற்பாடுகள், நிலைபேறான அபிவிருத்தி, தேர்தல் முறைமை மற்றும் அதன் திருத்தங்கள், நாடாளுமன்ற அறிக்கையிடலும் வெகுஜன ஊடகமும், பொதுமக்கள் தொடர்பு மற்றும் இலங்கை பெண்கள் அரசியலில் புதிய போக்கு ஆகிய பல்வேறு தலைப்புகளில் கல்வித்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களின் கட்டுரைகள் இந்நூலில் உள்ளடங்கப்பட்டுள்ளன.

இதன் மீளாய்வுக் குழுவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரத்னசிறி அரங்கல, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் அஜந்தா ஹப்புஆராச்சி, களனி பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.ஜீ.யோகராஜா, கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி கல்லூரியின் கலாநிதி டியூடர் வீரசிங்க மற்றும் களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் விஜயானந்த ரூபசிங்க ஆகியோர் காணப்படுகின்றனர்.







பொலிஸ் திணைக்களத்தின் 156 வருட நிறைவை முன்னிட்டு கிரேண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தாரக விஜேசிங்க (ஹேரத்), பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 3000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு நேற்று (08) இடம்பெற்றது. (படங்கள் - எம்.நசார்)

# மகாராணி எலிசபெத்தின் உடல்நிலை கவலைக்கிடம்

## மருத்துவர்கள் தீவிர கண்காணிப்பு



பிரித்தானிய மகாராணி எலிசபெத்தின் உடல்நிலை கவலைக்கிடமான நிலையில் உள்ளதுடன், அவரது உடல்நிலையை மருத்துவக் குழுவினர் தொடர்ந்து கண்காணித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய மகாராணியாக ராணி இரண்டாம் எலிசெபத் (வயது 97) பெக்கிங்ஹாம் அரண்மனையில் வசித்து வருகிறார். அவருக்கு திடீரென நேற்று உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, மகாராணியின் அதிகாரப்பூர்வமான மருத்துவக் குழுவினர் ராணிக்கு சிகிச்சையளித்து வருவதுடன், அவரது உடல்நிலையை மருத்துவக் குழுவினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

வேல்ஸ் இளவரசர், கமிலா மற்றும் கேம்பிரிட்ஜ் பிரபு ஆகியோர் ராணியுடன் உள்ளனர். மகாராணி எலிசபெத்திற்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டிருப்பது பிரித்தானிய மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவர் விரைவில் நலம் பெற வேண்டி உலகத் தலைவர்கள் பிரார்த்தனை தெரிவிப்பதாக தெரிவித்துள்ளனர்.

ராணி கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம்முதல் உடல்நலம் பாதிக்கப்பட்டு, நடக்கவும் நிற்கவும் சிரமப்பட்டார்.

இதுகுறித்து புதிய பிரதமர் லிஸ் ட்ரஸ் தனது ட்விட்டர் பக்கத்தில், ''இந்த மதிய உணவுநேரத்தில் பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வரும் செய்தியால் முழு நாடும் ஆழ்ந்த கவலையில் மூழ்கியுள்ளது'' என தெரிவித்துள்ளார்.

# இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக!

## வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்டுள்ள அவர்களது படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய - இலங்கை கடற்பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர்கிறது.

அதேபோல், தமிழக மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்வது, அவர்களின் மீன்பிடி வலைகளைச் சேதப்படுத்துவது, மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது என இலங்கை கடற்படையினர் தொடர்ந்து அட்டகாசத்தில் ஈடுபடுவதாக தமிழக மீனவர்கள் முறையிட்டு வருகின்றனர்.

மேலும், இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 100இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் இலங்கையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை



மீட்டுத் தந்து, தங்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும் தமிழக மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த 6ஆம் திகதி தமிழக மீனவர்கள் சிலரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசிடம் முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 9 மாதங்களில் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 150 தமிழக மீனவர்களை தூதரக நடவடிக்கைகள் மூலம் விடுவிக்க உதவியமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த செப்டெம்பர் 6ஆம் திகதி புதுச்சேரியைச் சேர்ந்த மீனவரின் விசைப்படகில் சென்ற மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் உள்ளிட்ட 12 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைவரப்படி, இலங்கை அரசின் வசம் 23 மீனவர்கள் உள்ளனர். மேலும், 95 மீன்பிடிப் படகுகளும் உள்ளன. இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்குத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மத்திய அரசும், வெளியுறவுத்துறையும் மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கடிதத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

# உலக செய்திகள்

# சிரியாவில் 5 மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்து 11 பேர் பலி



சிரியாவின் வடக்கு நகரமான அலெப்போவில் அடுக்குமாடி குடியிருப்பொன்று இடிந்து வீழ்ந்ததில், இடிபாடுகளில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஃபர்டஸ் பகுதியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட ஐந்து மாடிக் கட்டடம் நேற்றுமுன்தினம் திடீரென இடிந்து வீழ்ந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் மூன்று குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ள நிலையில், இடிபாடுகளுக்குள் மேலும் பலர் சிக்கியிருக்கக்கூடும் என்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தகவலறிந்து விரைந்துவந்த மீட்புப் படையினர், இடிபாடுகளில் சிக்கி இருந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

# 15இல் ஷங்காய் ஒத்துழைப்பு மாநாடு: நேரில் சந்திக்கும் புட்டின் - ஷி ஜின்பிங்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் அடுத்த வாரம் நேரில் சந்தித்துப் பேசவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 6 மாதங்களை கடந்துள்ளது. இப்போரில் ஆரம்பம்முதல் ரஷ்யாவுக்கு சீனா ஆதரவு தெரிவித்து வருகிறது. இந்நிலையில், உஸ்பெகிஸ்தானின் சாமர்கண்டில் எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் ரஷ்யா, சீனா, இந்தியா உள்ளிட்ட 8 நாடுகள் அங்கம் வகிக்கும் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாடு நடைபெறவுள்ளது.

# சிறையில் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு வெளிநாட்டுக் கைதிகள் தற்கொலை முயற்சி

## திருச்சியில் சம்பவம்



திருச்சி முகாம் சிறையிலுள்ள வெளிநாட்டுக் கைதிகள் 13 பேர் தூக்க மாத்திரை உட்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் திருச்சி சிறப்பு முகாமில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருச்சி மத்திய சிறையில் செயற்பட்டுவரும் சிறப்பு முகாமில் இந்தோனேஷியா, இலங்கை, தாய்லாந்து உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டதற்காக அடைக்கப்பட்டுள்ளனர். இதில் இலங்கைத் தமிழர்கள் மட்டும் 108 பேர் உள்ளனர். இவர்கள் தங்களை விடுதலை செய்ய வலியுறுத்தி போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், குஜராத் முந்த்ரா துறைமுகத்தில் 3,000 கிலோ ஹெரோயின் கடத்திய விவகாரத்தில் பிடிபட்டவர்களுக்கும், திருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமிலுள்ள கைதிகளுக்கும் தொடர்பிருப்பதாக தெரியவந்தது. இதையடுத்து தேசிய புலனாய்வுப் பிரிவு பொலிஸார், அமுலாக்கத் துறையினர் கடந்த மாதம் தீவிர சோதனை நடத்தினர். தொடர்ந்து திருச்சி மாநகர பொலிஸ் கமிஷனர் கார்த்திகேயன் தலைமையில் 300இற்கும் மேற்பட்ட பொலிஸார் சிறப்பு முகாமில் சோதனை நடத்தி கைதிகளிடமிருந்து 60 செல்போன்களை பறிமுதல் செய்தனர்.

இந்நிலையில், தங்களிடமிருந்து பொலிஸார் பறித்துச்சென்ற செல்போன்களை திருப்பித் தர வேண்டும். விரைவில் எங்களை விடுவிக்க வேண்டுமென சிறப்பு முகாமிலுள்ள 13 பேர் நேற்றுமுன்தினம் மாலை அளவுக்கதிகமாக தூக்க மாத்திரை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றனர். சிறப்பு முகாம் சிறை அதிகாரிகள் சென்று 13 பேரையும் மீட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவத்தால் திருச்சி சிறப்பு முகாமில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருமண தேடல் விளம்பரங்களை
**இலவசமாக** பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!




"உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை நாம் உங்களுக்குத் தருகிறோம்."

தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

**உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.**

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.

thamilaneditor@gmail.com

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7